19th
AUGUST
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 44 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com


## ஹரினுக்கு ஆலோசகர் பதவி

### தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு



அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய ஹரின் பெர்ணான்டோவுக்கு அவர் பதவி வகித்த அமைச்சுகளில்

08ம் பக்கம்பார்க்க...



# வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிதி இடை நிறுத்தம்

## றிஷாத் எம்.பீ. ஜனாதிபதிக்கு கடிதம்

(ஐ. ஏ. காதிர் கான்)

வடக்கு, கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான அரசாங்க நிதி இடை நிறுத்தப்பட்டமை தொடர்பில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து, இந்த நிதி நிறுத்தம் இடம்பெற்றுள்ளதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ரிஷாத் பதியுதீன் எம்.பி. எழுதியுள்ள கடிதத்தில் குற்றம் சுமத்தியுள்ளார்.

பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட கழகங்கள், நலன்புரிச் சங்கங்கள் மற்றும் ஏனைய

08ம் பக்கம்பார்க்க...

## கட்சி மோதல்களை தவிர்த்து ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்றுவோம்

### ஜனாதிபதி ரணில் வேண்டுகோள்



கட்சி மோதல்களைத் தவிர்த்து அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை கட்டியெழுப்ப இணைவோம். என "இயலும் ஸ்ரீலங்கா" முதல் கூட்டத்தில் ஜனாதிபதி தெரித்தார்.

அனுராதபுரம் சல்காது மைதானத்தில் (17) நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" பொதுக்கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி இங்கு மேலும் உரையாற்றுகையில், இந்த நாட்டைக் கட்டியெழுப்ப சஜித்தோ,

08ம் பக்கம்பார்க்க...



## ஆய்வுகளின்படி நாமே முன்னிலை

### மக்களின் யுகத்தை அமைப்போம்

என்னிடம் வெட்டிப் பேச்சுக்கள் இல்லை. இந்த நாட்டுக்கு வெட்டிப் பேச்சுக்கள் அவசியம் இல்லை. காட்சிப்படுத்தல் அவசியமில்லை. அபிவிருத்தி தான் தேவை. சொல்வதைச் செய்வதை நடைமுறையில் ஒப்புவித்துள்ளேன். அபிவிருத்தி யுகத்தை உருவாக்கி, நவீன

12ம் பக்கம்பார்க்க...

## மக்களின் அரசாங்கத்தை விரைவில் அமைப்போம்

### எம்மோடு அணி சேருங்கள் அனுர குமார அழைப்பு



வரலாற்றில் ஏற்பட்ட ஒரு சில படுகொலைகளுடன் அவர்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அவ்வாறு அந்த இயக்கத்தை தயாரித்துக் கொண்டிருப்பவர்கள் எங்களுக்கு தகவல்களை கூறிவருகிறார்கள்.

10ம் பக்கம்பார்க்க...

## சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம் 22இல் வெளியீடு

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல்

02ம் பக்கம்பார்க்க...



## மு.கா.விலிருந்து ஹரீஸ் எம.பி. இடைநிறுத்தம் ஹக்கீம் அதிரடி

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின்

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## வடக்கு..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

அடிப்படையிலான அமைப்புக்களின் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கணிசமான தொகையை ஒதுக்கியமைக்காக, ரிஷாத் பதியுதீன் எம்.பி. ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அந்தத் திட்டங்களை உடனடியாக நிறுத்துமாறும், எந்தவொரு நியாயமான காரணமும் இன்றி அந்த ஒதுக்கீட்டை திரும்பப் பெறுமாறும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

"ஜனாதிபதி வேட்பாளர் கௌரவ. சஜித் பிரேமதாஸ விற்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் ஆதரவளிப்பதாக அறிவித்த பின்னரே, இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது சந்தேகத்திற்குரியது. ஆனாலும், ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும், பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியின் தலைவராகவும், கடந்த சில தசாப்தங்களாக உங்களது ஆட்சியின் கீழ் பணியாற்றி வருகிறேன்.

அந்த அனுபவத்தின் மூலம் நீங்கள், உன்னதமானவர். எப்போதும் உண்மையுள்ளவராகவும், விடா முயற்சியுள்ளவராகவும், சிறந்த தார்மீக மற்றும் நெறிமுறைகளைக் கொண்டவர் என்பதையும் நான் குறிப்பிட்டுள்ளேன்.

அந்தவகையில், மேற்கூறிய காரணத்தினால், சில தனி நபர்கள் மற்றும் அதிகாரிகளால் நெறிமுறையற்ற வகையில், மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்குத் தெரியாமல், இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன்" என, ரிஷாத் பதியுதீன் எம்.பி. கூறினார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி தலையிடுமாறும், அந்தக் கடிதங்களை உடனடியாக இரத்துச் செய்து, குறிப்பிட்ட திட்டங்களை துரிதமாக அமுல்படுத்துவதற்கு, உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்குமாறும், ரிஷாத் பதியுதீன் எம்.பி. வலியுறுத்தினார்.

"தேர்தல் சட்டத்தை மீறும் செயல்" என்பதால், உரிய நிதியைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், இதுபோன்ற நெறி முறையற்ற செயல்கள் குறித்து, தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிட வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை இடை நிறுத்தி, ஜனாதிபதி செயலகம் கடிதம் வழங்கியதை அடுத்தே, ரிஷாத் பதியுதீன் எம்.பி. ஜனாதிபதிக்கு மேற்கண்டவாறு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

## மு.கா.விலிருந்து..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

உறுப்பினர் பதவியிலிருந்து ஹரீஸ் எம்.பியை தற்காலிகமாக இடைநிறுத்த கட்சித்தலைமை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் எழுத்து மூலம் நாளை அவருக்கு அறிவிக்கப்படும்

ஒட்டமாவடியில் இன்று நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் இதனை அறிவித்துள்ளார்.

## ஹரினுக்கு..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சட்ட கூட்டமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

குறித்த நியமனம் தொடர்பில், தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாக அந்த கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட சட்ட செயலாளர் சட்டத்தரணி துசித்த குணசேகர தெரிவித்துள்ளார்.

வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் உயர்நீதிமன்றின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் ஜனாதிபதி ஆலோசகர் பதவிக்கு ஹரின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளமை தேர்தல் சட்டத்தை மீறுவதாகும் என சட்டத்தரணி துசித்த குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

## சஜித்தின்..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

விஞ்ஞாபனம் எதிர்வரும் 22ஆம் திகதி ஸ்ரீலங்கா அறக்கட்டளையில் வெளியிடப்படவுள்ளதாக சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று (18) ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொள்கை இல்லாத குழுவினால் அரசாங்கத்தை நடத்த முடியாது எனவும், அரசாங்கத்தை நடத்த திறமையான தலைவர், குழு மற்றும் கொள்கை தேவை எனவும், அந்த காரணிகள் ஐக்கிய மக்கள் சக்தியிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# கடற்படை உத்தியோகத்தர் அனீக்

## காணாமற் போனமை குறித்து விசாரணை

பிரித்தானியாவில் இராணுவ பயிற்சி பெறச் சென்ற இலங்கை கடற்படை உத்தியோகத்தர் காணாமல் போனதையடுத்து பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பிரித்தானியாவின் புகழ்குரிய சண்டிஹெஸ்ட் இராணுவ அகடமியின் 44 வார பலத்த பயிற்சியை முடித்துக் கொண்டு அதிகாரமட்ட கெடட் உத்தியோகத்தராக பதவிப் பிரமாணம் பெற்ற மொஹமட் அனீக் என்பவரே காணாமல் போயுள்ளார்.

44 வார பயிற்சியை நிறைவு செய்த 209 பேரில் மொஹமட் அனீக்கும் ஒருவராவார். பயிற்சியை முடித்த பின் இந்த வாரம் இலங்கைக்கு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவர், அவருக்கென ஒதுக்கப்பட்ட விமானத்திற்கு சமூகமளிக்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த சனி அன்று இலங்கைக்கு வருவதற்கு விமான நிலையத்துக்கு செல்ல ஆயத்தமான நிலையில், அவரை விமான நிலையத்துக்கு எடுத்து செல்வதற்கான சகல ஏற்பாடுகளையும் லண்டனில் அமைந்துள்ள இலங்கை தூதராலயம் மேற்கொண்டிருந்த போதிலும் அவர் அதனை நிராகரித்திருந்தமை தெரியவந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை அவர் சன்டிஹெஸ்ட் இராணுவ அகடமியில் இருந்து வெளியேறி இருப்பதாக தகவல் வெளிவந்துள்ளது. இவருடைய பதவி உயர்வு வைபவத்தில் இலங்கையின் பிரித்தானிய தூதுவர் ரோகித் போகல்லாகமவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மாவனல்ல பிரதேசத்தை சேர்ந்தவரான முஹம்மட் அனீக் உரிய தினத்தில் இலங்கைக்கு வந்து சேரவில்லை என பிரித்தானிய தூதுவராலயம் உறுதி செய்துள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக இராணுவ ஜெனரல் மேஜர் ஜெனரல் குமார தெரிவித்தார்.







# மக்கள் பிரதிநிதிகளை தரக்குறைவாக நினைத்து ஊழல்வாதிகளாக சித்தரிப்பது கண்டிக்கதக்க விடயமாகும்

## முன்னாள் உறுப்பினர் கலிலுர் ரஹ்மான்

(எம்.எப்.றிபாஸ்)

மக்கள் பிரதிநிதிகளை இழிவுபடுத்தும் வகையில் அவர்கள் மக்களுக்காக செய்யும் சேவைகளை தரக்குறைவாக கருதி ஊழல்வாதிகளாக சித்தரிக்க முனைவது கண்டிக்கத்தக்க விடயமாகும்“ என கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் கலிலூர் ரஹ்மான் தெரிவித்தார்

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், விசேட நிதி ஒதுக்கீடுகளை பெற்று மேற்கொண்டு வரும் செயல்திட்டங்கள், தரகு பணம் பெற்று மேற்கொள்வதாகவும் இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் மூலம் முறைகேடுகள் இடம் பெறுவதாகவும் கூறி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளமையை கண்டித்து அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மக்கள் பிரதிநிதி என்ற வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீடுகள் மூலம் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் உதவிகள் மற்றும் சேவைகள், வாழ்வாதார திட்டங்கள் என்பவற்றை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எக்காலத்திலும் அவர்கள் செய்ய முடியும் என்பதை எல்லோரும் அறிவர் மக்களுக்காக சேவையாற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது காழ்ப்புணர்வு கொண்டு, இவ்வாறான கருத்துக்களை தெரிவித்து மக்கள் மத்தியில் நல்லவர்களாக தங்களை சித்தரிக்க முயல்பவர்கள் சமூகத்திற்கு செய்கின்ற பெரும் அநியாயமாகும்.

இவர்களது கருத்துக்களை விளங்கிக் கொள்ளாத முட்டாள்களாக மக்கள் இல்லை என்பதை இவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

பொதுமக்கள் தாராளமாக அரசியல் மேம்படுத்தப்பட்டுள்ளார்கள். சமூகத்தில் நடக்கும் எல்லா வகையான விடயங்களையும் அவர்கள் தெளிவாக அறிந்திருக்கிறார்கள். ஊழல்வாதிகள் யார்? லஞ்சம் பெறுபவர்கள் யார்? என்பதை மக்கள் இனம் கண்டு வைத்திருக்கிறார்கள்.

அபிவிருத்திகள் என்பது ஒரு நாட்டின் தேசிய கொள்கையாகும். இதன் அடிப்படையில் மக்களுக்கு வாழ்வாதாரம் வழங்குதல் மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் என்பன அரசின் உரிமையும் பொறுப்பும் ஆகும். இதனை பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக நிறைவேற்றுவதை தேர்தல் லஞ்சமாக கருத முடியாது.

மக்களுக்காக பணியாற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது சேறு பூசுவதை விடுத்தும், அவர்கள் மீது குற்றம் சுமத்துவதை விடுத்தும் தங்களாலும் தங்களது கட்சியினாலும் மக்களுக்காக எதைச் செய்ய முடியும், மக்களின் தேவை அறிந்து எப்படி உதவ முடியும் என்பது தொடர்பாக சிந்திப்பார்களாயின், இந்த சமூகத்திற்கு விடிவு கிடைக்கும்.

அதை விடுத்து சுயநல அரசியலுக்காக மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தி அவர்களை இழிவு படுத்த நினைப்பது தார்மீகமான அரசியல் செயற்பாடாக அமையாது. பாராளுமன்ற உறுப்பினர்களின் எல்லா நிதி ஒதுக்கீடுகளும் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்கலங்கள் ஊடாக முறைமைப் படுத்தப்பட்ட அடிப்படையில் நிதி பிரமாணங்களை பின்பற்றி மேற்கொள்ளப்படுவதை, பிழையான கண்ணோட்டத்தில் பார்த்து அவற்றை ஊழலாக சித்தரிக்க முனைபவர்கள் தனிப்பட்ட அரசியலுக்காக முன்வைக்கும் நிகழ்ச்சி நிரலாகவே கருத வேண்டி இருக்கிறது.

ஆகவே, சமூகத்துக்காக செயற்படும் அரசியல்வாதிகள் மீது குறை கண்டு, அவர்களது செயற்பாடுகளை முடக்குவதை நிறுத்தி தங்களால் முடியுமான செயல்பாடுகளின் மூலம் மக்களுக்கான சேவைகளை ஆற்ற முன் வர வேண்டும். மாறாக அடுத்தவர்கள் மீது குற்றம் சுமத்தி பிரபல்யமாக நினைக்கும் இவர்களது செயற்பாடுகள் ஒருபோதும் மக்கள் மத்தியில் எடுபடாது என்பதை இவ்வாறான சுயநல அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்“ எனவும் கூறினார்.



## கருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*Lanka bizz என்ற இணையத்தளம் மேற்கொண்ட ஜனாதிபதி தேர்தல் கருத்துக் கணிப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச முன்னிலையில் உள்ளார்.*

*Ai தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆகஸ்ட் 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இக் கருத்துக் கணிப்பில் 34 வீத வாக்குகளைப் பெற்று சஜித் பிரேமதாச முதலிடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.*

*இக கருத்துக் கணிப்பின்படி தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுர குமார திஸாநாயக்க 33 வாக்குகளைப் பெற்று ஏட்டிக்குப் போட்டியாக உள்ளார்.*

*இதன் மூலம் சஜித் பிரேமதாச, அனுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கிடையில் கடும் போட்டி நிலவுவதை அவதானிக்க முடிகின்றது.*

*பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ 18 வீத வாக்குகளையும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 10 வீத வாக்குகளைப் பெற்று நான்காமிடத்தையே பெற்றுள்ளார்.*






www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 AUGUST 19 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## பங்களாதேஷ் வழமைக்கு வர அயல் நாடுகள் ஒத்துழைப்பு அவசியம்

அயல் நாடான பங்களாதேஷில் குழப்ப நிலை தொடருகின்றது. பிராந்தியத்தின் புதிய நாடாக வளர்ச்சி கண்ட பங்களாதேஷ் ஒரு காலத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள நாடாக இருந்தது. ஷேய்க் ஹசீனா ஆட்சி பொறுப்பினை ஏற்ற பின் நாடு பல வகையிலும் முன்னேற்ற பாதையில் பயணித்திருந்தது. அடிக்கடி வெள்ளபெருக்கு போன்ற இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பங்களாதேஷ் கடந்த பத்து வருடங்களில் பொருளாதார சுபீட்சத்தை அடையும் நாடாக வளர்ச்சி கண்டிருக்கிறது. இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது 200 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கி இலங்கைக்கு உதவிய நாடே பங்காளதேசமாகும். பங்காளதேசத்திலிருந்து இலங்கைக்கு உதவியா என பலரும் கேள்வி கேட்கும் அளவுக்கு பங்காளதேஷ் ஓரளவு வளர்ச்சி கண்டு வந்திருந்தது.

துரதிஷ்டவசமாக ஷேய்க் ஹசீனா எதிர்க்கட்சிகள் தொடர்பாக கடைப்பிடித்த கொள்கைகள், அடக்குமுறை நாட்டில் இளைய தலைமுறையினரின் மத்தியில் வெறுப்பினை உருவாக்கியது. முஸ்லிம் அமைப்புகள் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் தொடர்பாக அவர் செயற்பட்ட முறையும் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியது. முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சி தலைவருமான காலிதா ஸியா பல வருட காலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இலங்கையில் இடம்பெற்ற அரகலய போராட்டம் போன்று மக்கள் மற்றும் மாணவர்கள் அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தீவீரவாதிகள் என கூறி அரசு அவர்களை முடக்க முற்பட்டது. படையினரின் இச்செயற்பாடு வெற்றியளிக்கவில்லை. நாடு இதனால் பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியது. பங்களாதேஷில் அமைதியை உருவாக்குவது அவசியம் என முஜஊ போன்ற முக்கிய அமைப்புகள் முன்வந்ததன் விளைவு, பிரதமர் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்து அயல் நாடான இந்தியாவுக்குப் பயணமானார். இந்தியா அவருக்கு உடனே புகலிடம் அளித்தது. இதே நேரம் நாட்டின் பிரதம ஆலோசகராக நோபல் பரிசு பெற்ற உலகப் புகழ் பேராசிரியர் யூனுஸ் நியமிக்கப்பட வேண்டும் என போராட்ட மாணவ அமைப்பினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பிரான்ஸில் தங்கி இருந்த பேராசிரியர் யூனுஸ் மாணவர்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து நாடு திரும்பினார். இப்போது நாட்டின் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சரவைக்கு சமாந்தரமான ஆலோசனை சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் போராட்டத்தை முன்னெடுத்த இரு மாணவ தலைவர்கள் இடம்பெற்றிருந்தனர்.

பங்காளதேஷத்தை சரியான வழியில் இட்டு செல்லும் பொறுப்பு இவ் ஆலோசனை சபைக்கே வழங்கப்பட்டுள்ளது. முழு உலகின் கண்ணும் இப்போது பங்களாதேசத்தின் பக்கம் திரும்பி உள்ளது. இந்த நாடு எப்போது வழமைக்கு திரும்பும் என்பதே இப்போதைய கேள்வியாக முன்வைக்கப்படுகிறது. முக்கியமான விடயம் பங்களாதேஷ் ஒரு முஸ்லிம் நாடாகும். இந்த நாட்டை வழமைக்குத் திருப்ப அயல் நாடுகள் பங்களிப்பு செய்ய முன் வர வேண்டும். குறிப்பாக முஸ்லிம் நாடுகளுக்கு இதிலே பாரிய பொறுப்பு உள்ளது. பேராசிரியர் மொஹம்மட் யூனுஸ் தலைமையிலான புதிய இடைக்கால அரசுக்கு ஆதரவளித்து பங்காளதேசத்தின் நிலைமைகளை சீர்படுத்த முஜஊ எனப்படும் முஸ்லிம் நாடுகளின் அமைப்பினரும் முன்வருவது சிறந்தது.

# "இஸ்லாமிய சிந்தனைகளும் நவீன சவால்களும்" சொற்பொழிவு











(பீ.எம்.முக்தார்)

இஸ்லாமிய சிந்தனைகளும் நவீன சவால்களும் என்ற தலைப்பில் மாபெரும் இஸ்லாமிய மார்க்கச் சொற்பொழிவு நிகழ்வொன்று பேருவளை காலி வீதி ஸிமிச் வரவேற்பு மண்டபத்தில் நேற்று (18) நடைபெற்றது.

கட்டார் ஹம்மாத் பின் கலீபா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழக மத ஒப்பாய்வுத்துறை மற்றும் இஸ்லாமிய கற்கைநெறித்துறை பேராசிரியர் கலாநிதி தீன் முஹம்மத் (அல்-அஸ்ஹரி) விசேட பேச்சாளராக கலந்து கொண்டார்.

பேராசிரியர் கலாநிதி தீன் முஹம்மத் (அல்- அஸ்ஹரி) இஸ்லாமிய தஹ்வா பிரசாரப் பணிக்காக ஆற்றும் மாபெரும் சேவைகளுக்காக சங்கைக்குறிய அஷ் செய்ஹ் அப்துல் ரஸ்ஸாக் ஆலீம்,சங்கைக்குறிய அஷ் ஷெய்க் அப்துர் ரஹீம் ஆலிம்,மௌலவி ஏ.ஸி.ஏ.ஏ.ஸஹில் (அல்-அஸ்ஹரி) அப்துல் ஹாதி முஹம்மத் இஜ்லான் ஆகியோர் இந்த நிகழ்வில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

அத்தோடு சாதனைகளையும் பல்வேறு முக்கிய அடைவுகளையும் அடைந்த மார்க்க அறிஞர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யமன் ஹளரமௌத் தாருல் முஸ்தபா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக் கழகத்தில் சரீஆத் துறையில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ள அஷ் செய்ஹ் அப்துல் காதர் ஆலிம் பின் அஷ் செய்ஹ் அப்துல் முஹீஸ் ஆலிம் (யமனி) அஷ் செய்ஹ் முஹம்மத் இஸ்மாயில் ஆலிம் பின் அஷ் செய்ஹ் அப்துஸ் ஸமி ஆலிம் (யமனி) அஷ் செய்ஹ் அப்துல் காதர் ஆலிம் பின் முஹம்மத் முஸ்தபா (யமனி) அஷ் செய்ஹ் முஹம்மத் இஸ்மாயில் ஆலிம் அப்துல் ரஷீத் (யமனி) மற்றும் யமன் ஹளரமௌத் ரிபாத் அல் இமாம் முஹாஜிர் இஸ்லாமிய கற்கை நிலையத்தில் இஸ்லாமிய ஷரீஆ துறை கற்கையை பூர்த்தி செய்துள்ள அஷ் செய்ஹ் இஸ்மாயில் ஆலிம் அஹமத் (யமனி) ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

பேராசிரியர் தீன் முஹம்மதின் உரையின் பின்னர் கேள்வி பதில் நிகழ்ச்சியும் இடம்பெற்றது.சீனன் கோட்டை ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பணிப்பாளர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஜே.எம்.பஸ்லான் (அஷ்ரபி பீ.ஏ.) இதனை நெறிப்படுத்தினார். பேராசிரியர் கேள்விகளுக்கு சிறந்த முறையில் பதிலளித்தார்.

சங்கைக்குறிய அஷ் செய்ஹ் ஸக்கி அஹமத் பின் அஷ் செய்ஹ் காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரி நன்றியுரை நிகழ்த்தினார்.

சீனன் கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் ஆசிகுர் ரஸூல் குழுவினரின் கஸீதா இடம் பெற்றதோடு காரி மௌலவி எம்.எஸ்.எம்.ரஸீன் (கபூரி-ஜமாலி) யின் கிராஅத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

மௌலவி ஏ.ஸி.ஏ.ஏ.ஸஹில் (அல்-அஸ்ஹரி) தலைமையிலான குழுவினர் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

சங்கைக்குரிய ஸாதாத்மார்கள், உலமாக்கள், அறிஞர்கள், அரபுக் கல்லூரிகளின் அதிபர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பள்ளிச் சங்க உறுப்பினர்கள், பள்ளிவாசல்களின் இமாம்கள்,வக்பு சபை உறுப்பினர்கள், தரீக்காக்களின் முரீதீன்கள், முஹிப்பீன்கள், இஹ்வான்கள் உட்பட பெருமளவிலானோர் நிகழ்வில் பங்குபெற்றனர்.



# முஸ்லிம் விவாகப் பதிவாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(உக்குவளை ஜலீல்)

உக்குவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கான முஸ்லிம் விவாகப் பதிவாளர்களுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

இதற்காக விண்ணப்பிப்போர்களுக்கான. தகுதிகளாவன தமது பகுதிகளில் நிரந்தர வாசிப்பாளராவும் சாதாரண தரம் சித்தியெய்திய மும்மொழிகளில் சரள அனுபவத்துடன் நல்லொழுக்க முள்ள விவாகமானவர்களாவும் வயது30 முதல் 55 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பதுடன் தமது வசிப்பிடம் மற்றும் நல்லொழுக்கம் பற்றிய கிராம உத்தியோகத்தர்களது சான்றுகள் அவசியமாகும் இதுகுறித்த மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களைப் பெற உக்குவளை பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளலாம் அல்லது www.rgd.gov.lk எனும் இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்துகொல்லலாம் விண்ணப்பமுடிவு திகதி இம்மாதம் 20ம் திகதி.

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

## நல்லுபதேசம் பெற தெளிவான வசனங்கள்..!

(நபியே!) அவனே இவ்வேதத்தையும் உங்கள் மீது இறக்கி வைத்தான். இதில் முற்றிலும் தெளிவான பொருள் கொண்ட "முஹ்கமாத்" வசனங்களும் இருக்கின்றன. இவைதான் இவ்வேதத்தின் அடிப்படையாகும். மேலும் (உங்களுக்கு) முழுமையான பொருள் தெரிய முடியாத "முதஷாபிஹாத்" வசனங்களும் இருக்கின்றன. எவர்களுடைய உள்ளங்களில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள் தெளிவற்ற பொருள்களை உடைய "முதஷாபிஹாத்" வசனங்களையே தேடிப் பின்பற்றுவார்கள். குழப்பத்தை உண்டு பண்ண கருதியும், அதை (தங்களின் தவறான நோக்கத்திற்கேற்ப) மாற்றுவதற்காகவும் இவ்வாறு செய்கின்றனர். ஆயினும், இதன் உண்மை கருத்தை அல்லாஹ்வை அன்றி ஒருவரும் அறிய மாட்டார்கள். உறுதிமிக்க கல்விமான்களோ (அதன் கருத்து தங்களுக்கு முழுமையாக விளங்காவிட்டாலும்) இதனையும் நாங்கள் நம்பிக்கை கொண்டோம். (இவ்விரு வகை வசனங்கள்) அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவை தான் என்று கூறுவார்கள். அறிவுடையவர்களை அன்றி மற்ற எவரும் (இவைகளைக் கொண்டு) நல்லுபதேசம் அடைய மாட்டார்கள். (3:7)

(அன்றி அவர்கள்) எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு நேரான வழியை அறிவித்ததன் பின்னர் எங்களுடைய உள்ளங்கள் (அதிலிருந்து) தவறிவிடுமாறு செய்யாதே! உன் (அன்பான) அருளையும் எங்களுக்கு அளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெரும் கொடையாளி! (3:8)

**குறிப்பு:-**

"முஹ்கமாத்" என்பதன் கருத்து தெளிவான மொழிநடையில் உள்ள வசனங்கள். பொருள் நிர்ணயிப்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லாத வசனங்கள் என்பதாகும். இவ்வகை வசனங்கள் தான் இறைவேதத்தின் மூல அடிப்படைகளாகும். அதாவது அல்குர்ஆன் எந்த நோக்கத்திற்காக இறக்கி அருளப்பட்டதோ அதனை இவ் வசனங்கள் தான் நிறைவு செய்கின்றன. உலகத்துக்கு இஸ்லாத்தின் பால் இவற்றில் தான் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவற்றிலேயே படிப்பினை தரும் நிகழ்ச்சிகளும் அறப் போதனைகளும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இவ் வசனங்களிலேயே வழிகேடுகள் மரறுத்துரைக்கப்பட்டு நேரிய வழி தெளிவாக்கப்பட்டுள்ளது. இவற்றில் தான் தீனின் அடிப்படை விதிகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இவ் வசனங்களில் தான் கோட்பாடுகள், வணக்கங்கள், ஒழுக்கங்கள், கடமைகள் மற்றும் ஏவல் விலக்கல்களுக்கான சட்டங்கள் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

"முதஷாபிஹாத்" இதன் பொருள்: தெளிவான பொருள் கொள்வதில் ஐயப்பாடுகளுக்கு இடமளிக்கும் வசனங்கள் என்பதாகும். மறைவான உண்மைகளைப் பற்றி குறைந்தபட்ச தேவையான அளவு அறிவு கூட மனிதனுக்கு வழங்கப்படாவிடில், மனித வாழ்க்கைக்கு எவ்வித வழியையும் வகுத்தளிக்க இயலாது என்பது வெளிப்படை..இதுபோன்றே மனித புலன்களுக்கு அப்பாற்பட்ட, மனிதன் என்றுமே பார்த்திராத, தொட்டிராத, சுவைத்திராத பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றைக் குறிப்பிட மனித மொழியில் அவற்றுக்கு என்றே சூட்டப்பட்ட சொற்கள் கிடைக்க மாட்டா.. மேலும் கேட்போரின் உள்ளத்தில் அந்த விஷயங்களில் சரியான சித்திரத்தை கொணர்கிற வகையில் விளக்கிச் சொல்லும் பிரபலமான மொழிநடைகளும் கிடைக்க மாட்டா.. ஆகவே மனித புலன்களுக்கு உட்பட்ட பொருள்களில் எவை மேற்கூறிய மறைவான விஷயங்களின் எதார்த்த நிலைக்கு மிகவும் ஒப்பாக, நெருக்கமாக உள்ளனவோ அவற்றைக் கொண்டுதான் அந்த மறைவான விஷயங்களை விவரிக்க முடியும். அப்பொருளை குறிப்பதற்கு மனித மொழியில் இருக்கின்ற சொற்களே பயன்படுத்தப்படும் என்பது வெளிப்படை.. ஆகையால் இந்த உண்மைகளை விளக்க நேரிடும் போது குர்ஆன் இத்தகைய நடையினையே கையாளுகிறது. "முதஷாபிஹாத்" என்பதன் கருத்து இத்தகைய நடை கையாளப்பட்ட வசனங்கள் என்பதாகும்.

இங்கு "முதஷாபிஹாத்" வசனங்களின் சரியான கருத்து என்ன என்று அவர்களுக்கு தெரியாத போது அந்த வசனங்கள் மீது அவர்கள் எப்படி நம்பிக்கை கொள்ள முடியும்? எனும் ஐயம் எவருக்கும் வரத் தேவையில்லை. ஏனெனில், அறிவுள்ள ஒரு மனிதனுக்கு குர்ஆன் அல்லாஹ் உடைய வாக்கு தான் எனும் உறுதி "முஹ்கமாத்" தெளிவான மூல வசனங்களை படிப்பதன் மூலம் கிடைத்து விடுகின்றனவே ஒழிய "முதஷாபிஹாத்" வசனங்களுக்கு கற்பிக்கப்படும் விளக்கங்களால் அல்ல.

"முஹ்கமாத்" வசனங்களை சிந்தித்துப் பார்ப்பதால் இது இறைவேதம் தான் என்ற மனநிறைவு கிடைத்து விடுகிறது.

-தப்ஹீமுல் குர்ஆன்-

தேர்தல் விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க வேண்டுமாயின்
தொடர்புகளுக்கு:
070 239 7210

# ஏறாவூரில் 200 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



ஏறாவூர் மஸ்ஜிதுல் நூருள் நிஷா மஹல்லாவை சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் பெண் தலைமைதாங்கும் 200 குடும்பங்களுக்கு அஸீஸா பௌண்டேஷன் உதவியுடன் நேற்று (15) உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டது.

அஸீஸா பௌண்டேன் பணிப்பாளர் சாதிக் ஹசனிடம் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் குறித்த உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர், அஸீஸா பௌண்டேன் பணிப்பாளர் சாதிக் ஹசற், செக்டோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான ஏ.எல்.நியாஸ், ஏறாவூர் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் கபூர்தீன், றகுமா சமூக சேவை நற்பணி மன்றத்தின் தலைவர் அகீல் அஹமத் உட்பட பள்ளிவாசல் நிர்வாகத்தினரும் இந்நிகழ்வில்

கலந்துகொண்டு குறித்த உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

ஏறாவூர் பிரதேசத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் பெண் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு ஒவ்வொரு வருடமும் அஸீஸா பௌண்டேஷன் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரமின் 2024/25 நியமனங்கள் வழங்கி வைப்பு





(எஸ்.எம்.ஜாவித்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 2024/25 ஆம் ஆண்டுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட புதிய நிறைவேற்று குழுவினருக்கும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஆலோசகர்கள்மற்றும் மாவட்ட இணைப்பாளர்களுக்கு இடையிலான அறிமுக கூட்டம் மற்றும் நியமனம் வழங்கும் நிகழ்வு அமைப்பின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நேற்று சனிக்கிழமை (17) நடைபெற்றது.

தெமடகொட ஸ்ரீலங்கா ஜமாஅதே இஸ்லாமி தலைமையக பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது தலைவர் உள்ளிட்ட நிருவாக குழு உறுப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் மாவட்ட இணைப்பாளர்களுக்கும் நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன



# கத்தார் பேச்சு வார்த்தை தோல்வி...

# ஈரான், இஸ்ரேல் போர் எந்த நேரமும் தொடரலாம்..!




எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

வெள்ளிக்கிழமை 16/08/24 ந் திகதி தோஹாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாத நிலையில் மீண்டும் போர் தொடரும் அபாயம் மத்திய கிழக்கில் அதிகரித்து வருகிறது என்பதை தற்போதைய கள நிலவரமாக இருக்கிறது. இந்த பேச்சு வார்த்தை தொடரும் நிலையில் போரில் ஈடுபட வேண்டாம் என்று ஈரானுக்கு கத்தார் வேண்டுகோள் விடுத்துள்ளது . இந்த நிலையில் நிலையிலும் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

இந்த பேச்சு வார்த்தையில் நல்ல முடிவு ஏற்படாது என்று ஹமாஸ் ஏற்கனவே புறக்கணித்த நிலையில் அவர்கள் நினைத்தது போலவே இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு 4 கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முன் வர வேண்டும் என்று கூறிய நிலையில் பேச்சுவார்த்தையில் சுமூகமான தீர்வு ஏற்பட வாய்ப்பு இல்லை என்பதே அனைவரின் கருத்தாகும்.

1) முதலாவதாக ஆயுதங்கள் ஏந்திய நிலையில் ஹமாஸ் போராளிகள் மத்திய காசாவில் இருந்து வடக்கு காசா செல்வது தடுக்கப்பட வேண்டும்.

2) இஸ்ரேலிய அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் தான் ரஃபா பார்டர் மட்டும் காசா, எகிப்து வரையிலான இடங்கள் இருக்க வேண்டும்.

3) நாங்கள் தரும் அட்டவணை அடிப்படையிலான இஸ்ரேலியர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்

4) ஹமாஸ் இயக்கம் தருகின்ற அட்டவணை அடிப்படையில் பாலஸ்தீன கைதிகளை விடுதலை செய்ய மாட்டோம். அதே சமயம் நாங்கள் விடுதலை செய்யும் கைதிகளை பாலஸ்தீன பிரதேசத்தில் இருந்து நாடு கடத்த வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இந்த பேச்சுவார்த்தையில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்பு இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது

ஈரான் புதிய அதிபர் மசூத் பெஷஷ்கியின் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ள சென்ற ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவராக செயல்பட்டு வந்த இஸ்மாயில் ஹனியாவை ஈரானில் வைத்து படுகொலை செய்த சூழலில் தான் இந்த போர் தற்போது ஏற்படும் சூழல் உருவானது.

ஸஇஸ்மாயில் ஹனியேவின் கொலையின் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாக ஹமாஸ் மற்றும் இரான் கூறியிருந்தன. இந்த பின்னணியில் தற்போது ஏற்பட்டுள்ள போர் மேகங்கள் எந்தவொரு அடிப்படையில் பயணிக்க போகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவது சற்று கடினமான ஒன்றாகவே இருக்கிறது.

சர்வதேச வல்லுனர்கள் இது குறித்து மாறுபட்ட கருத்துக்களை தொடர்ந்து வெளியிட்டு வருகிற நிலையில் இந்த போர் கண்டிப்பாக ஏதாவது வழியில் நடைபெறும் என்பதே யதார்த்தமான உண்மையாகும்.. அதேநேரத்தில் ஈரான் இந்த போரில் நேரடியாக இறங்கி தாக்குதலை தொடுக்க போகிறார்களா இல்லை தனது வலது கரங்களான (ீசழஒல) போராட்ட குழுக்களான ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஏமன் ஹொதிக்கள் மூலம் இந்த தாக்குதலை தொடர்ந்து நடத்தி வெற்றி பெற திட்டமிடல் உள்ளதா என்பதை நாம் உறுதியாக கூற கூடியதாக இல்லை என்பதை இந்த தருணத்தில் நாம் தெளிவாக கோடிட்டுக் காட்டி கொள்ள விழைகிறேன்.

பொதுவாக சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் வதந்திகள் மற்றும் கருத்துக்களை வெளியிட்டு வந்த போதிலும் சர்வதேச அணு ஆயுத வல்லரசுகள் மோதும் போது இந்த போர் வேறு விதமான கடுமையான நிலையை கள முனையில் ஏற்படுத்தும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரத்தில் இந்த பதட்டம் நிறைந்த போர் சூழலில் இதற்கு பதிலடி கொடுப்பதைத் தவிர தங்கள் நாட்டுக்கு வேறு வழியில்லை என இரானின் பொறுப்பு வெளியுறவுத்துறை அமைச்சர் க்யூரி அலி பாகேரி கனி தெரிவித்துள்ளார். ஏனெனில் தொடர்ந்து ஈரான் நாட்டின் ஆளுமைகள், ராணுவ செயல்பாட்டாளர்கள் மற்றும் இஸ்மாயில் ஹனியா போன்ற தலைவர்களை அவர்கள் படுகொலை செய்துள்ள நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள பதட்டத்தை நாம் முன்னர் நடைபெற்ற சம்பவங்களுடன் சமன்பாடு கொண்டு ஒப்பிட்டு பார்ப்பது ஏற்புடையதாக இல்லை என்பதே எமது கருத்தாகும்.

சரியான நேரத்தில் மற்றும் சரியான முறையில் இரான் தக்க பதிலடி கொடுக்கும் என்றும் அவர் கூறினார்.இரானின் பதிலடி, இரானின் இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்பிற்காக மட்டுமல்ல, "முழு பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கானதாகவும்" இருக்கும் என்று கனி கூறினார்.

கடந்த சில மாதங்களாக நடைபெற்ற முறுகல் தன்மை ஒரு வலுவான நிலையை தற்போது எட்டியுள்ளதை நாம் காண கூடியதாக இருக்கிறது அதே நேரத்தில், இரானின் பதிலடி தாக்குதல் முழு பிராந்தியத்தையும் ஒரு பரவலான மோதலில் மூழ்கடிக்கும் என்ற கவலையும் நிலவுகிறது.எனினும், ஈரான் பொறுப்பு வெளியுறவு அமைச்சர் இதுபற்றி இதுவரை எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை. மேற்கத்திய நாடுகள் ஈரானைப் பற்றிய உளவுத் தகவல்கள் போதிய அளவு இல்லை என கூறுகின்றன. அதாவது உண்மை நிலை தெரியாமல் தடுமாறும் நிலையில் அவைகள் இருக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. எனவே ஈரான் என்ன செய்யத் திட்டமிடுகிறது என்பதைக் குறித்து தெளிவாகத் தெரியவில்லை.இந்த ஆண்டு ஏப்ரலில், சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸில் உள்ள இரானிய தூ தரக வளாகத்தின் மீது வான்வழித் தாக்குதலில் இரானின் இஸ்லாமிய புரட்சிக் காவலர் படையை சேர்ந்த 8 பேர் கொல்லப்பட்டனர்.இது இஸ்ரேலின் தாக்குதல் என்று நம்பப்பட்டது. இது இரானுக்கு ஏற்பட்ட மற்றொரு அடியாக பார்க்கப்பட்டது.இதற்கிடையே அமெரிக்க அதிகாரிகள், முந்தைய முயற்சிகள் தோல்வி அடைந்தது போல் இல்லாமல், இம்முறை இரான் ஒரு பெரிய தாக்குதலுக்கு தயாராகி வரலாம் என்று கூறியுள்ளனர்.இஸ்மாயில் ஹனியேவின் மரணம் துல்லியமான ஏவுகணைத் தாக்குதலால் ஏற்படவில்லை என்றும் இரானுக்குள் உள்நாட்டு உதவியுடன் நடந்த தாக்குதல் என்றும் சமீபத்திய ஊடக செய்திகள் கூறுகின்றன. அதேநேரத்தில் ஈரான் இந்த போரை தாமதப்படுத்தி வருவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது . அணு ஆயுத வல்லரசாக இருக்கும் ஈரானை இந்த போரில் ஈடுபடுத்தி அதன் மூலம் மேலும் பல்வேறு தடைகளை அதன் மேல் நிகழ்த்த எந்த அடிப்படையிலான திட்டங்களை மேற்குலகம் தீர்மானம் செய்து வைத்துள்ளது என்பது போன்ற காரணங்களை ஈரான் தற்போது மிகவும் கவனமாக ஆய்வு செய்து வரும் நிலையில் இஸ்ரேலிய நாட்டின் வடபகுதியில் மிகவும் கடுமையான தாக்குதலை ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் மூலம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் கடந்த வாரம் ஜோர்டானின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஈ ரான் சென்றிருந்தார். புதன்கிழமை அன்று, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் இரான் அதிபருடன் பேசினார். பிரெஞ்சு தூ தரகத்தின் தகவலின்படி, புதிய ராணுவ பதட்டங்களைத் தடுக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு இரானிடம் இம்மானுவேல் மக்ரோன் கேட்டுக் கொண்டார், என கூறப்படுகிறது.

இதனிடையே, லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாஹ் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்கள் எதிர்கொண்டு வருகிறது. ஹிஸ்புல்லாஹ்வால் நடத்தப்படும் தாக்குதல்கள் முழுமையாக இரான் ஆதரவு மற்றும் ஆலோசனைகள் அடிப்படையில் தான் நடைபெற்று வருகிறது என்பதை நாம் அறிவோம்.

அதே சமயம் ஹிஸ்புல்லாஹ் தளபதி ஃபவாத் க்ரின் மரணத்திற்கு பழிவாங்குவதற்காக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதாக ஹிஸ்புல்லாஹ் அறிவித்துள்ளது.

இஸ்மாயில் ஹனியே கொலை செய்யப்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு, பெய்ரூட்டில் வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தளபதி ஃபவாத் /க்ர் கொல்லப்பட்டார். ஹிஸ்புல்லாஹ் கண்களின் கோட்டையாக கருதப்படும் பெய்ரூட்டின் தஹியா பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

தற்போதைய நிலையில் இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவம் தலைமையும் மிகவும் பதட்டத்தில் உள்ளது என்பதே இந்த போரின் அரசுகளின் வெற்றியாக இருக்கிறது. ஏனெனில், தற்போதைய பதட்டம் நிறைந்த சூழலில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு மற்றும் உயர் ராணுவம் மற்றும் அரசு பிரதிநிதிகள் பதுங்கு குழிகள் மறைந்து வாழும் சூழலை ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைமை ஏற்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேலிய பொது சமூகம் தற்போது பெஞ்சமின் நிதான்யாகு ராஜினாமா செய்ய வேண்டும் என்று கூற கூடிய அளவில் நிலைமை சீர் கெட்டு போய் உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவத்தில் உள்ள 41 பெட்டாலியன் கம்பெனிகள் எத்தனை காலம் தான் நாங்கள் உயிரை இழக்க முடியும் , முடிவு தெரியாத போரில் நாங்கள் ஈடுபட முடியாது என்பதாக கருத்துக்கள் வெளி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதே நிலை நீடித்தால் இஸ்ரேலிய நாட்டில் ஒரு வேளை புரட்சி நடந்தாலும் ஆச்சரியம் அடைவதற்கு இல்லை என்கிற அடிப்படையில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இத்தனை மனித இனம் சார்ந்த படுகொலைகளை நடத்த அமெரிக்கா அரசின் உந்துதல் மட்டுமே காரணமாக பார்க்கப்படுகிறது. ஏனெனில், அமெரிக்கா தற்போது வரை இஸ்ரேலிய போருக்கான நிதியுதவியாக 3 பில்லியன் என்கிற மிகப் பெரிய அளவிலான தொகையை ஒதுக்கீடு செய்து உள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் போது அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகள் முழுமையாக தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்து விட எத்தனிக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றது என்பது தான் உண்மையாகும்.

குறிப்பாக மத்திய கிழக்கில் ஈரான் ராணுவம் அணு ஆயுத பலம் நிறைந்த சர்வதேச வல்லமை மற்றும் தொழில்நுட்ப கட்டமைப்பு சேவைகள் கொண்டுள்ள ராணுவமாக மாறி விட்டதை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மிகவும் அச்சுறுத்தலாக உற்று நோக்கி வருகிறது. இதனை முறியடித்து ஈரானை நாசப்படுத்தி விட்டால் நீண்ட கால இலாப நோக்கை தாங்கள் அடையலாம் என்று அவர்கள் நம்பும் வாய்ப்பு இல்லை என்று நாம் மறுத்து விட கூடியதாக இல்லை. அதேநேரத்தில் ஈரான் போன்ற வலிமை வாய்ந்த இராணுவ பலம் வாய்ந்த தேசத்தை அத்தனை எளிதில் வீழ்த்தி விட சாத்தியக்கூறு இல்லை என்பதையும் அமெரிக்கா நன்கு உணர்ந்து கொண்டு வருவதையும் நாம் காண முடிகிறது.

இப்போது காசாவில் பொதுமக்களின் துயரத்தின் விடியலுக்கு எந்தவொரு தேசமும் பதில் தர இயலாத துர்பாக்கிய நிலை தான் தொடர்ந்து காணப்படுகின்றது. இந்த துயரத்தின் விளைவாக இதுவரையில் 40000 அப்பாவி பொதுமக்கள் குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டு விட்டார்கள். கடந்த வாரங்களில் பள்ளிகளில் நாசாகார பங்கர் பஸ்டர் குண்டுகளை வீசி 100 பேரை கொலை செய்து விட்டனர். இதனை கேள்வி கேட்க நாதியற்ற நிலையில் கோலன் குண்டுகளில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு வீசிய ஏவுகணைகள் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டதை சர்வதேச மீடியாக்கள் பேச தவறவில்லை.

தற்போதைய நிலையில் அமெரிக்கா அரசின் அதி வல்லமை கொண்ட சக்திவாய்ந்த கப்பல்கள் மற்றும் விமானங்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் தங்கள் இலக்கினை நிர்ணயம் செய்வதில் கவனம் செலுத்தி வருகிறது. இதன் மூலம் தனது முதலாளித்துவ ராணுவ பலத்தை காட்ட அவர்கள் முயலுவது நமக்கு தெளிவாக தெரிகிறது. ஆனால், அமெரிக்கா ராணுவம் கடந்த காலங்களில் வியாட்நாம் மற்றும் ஆப்கானிஸ்தானில் பெற்ற மோசமான அனுபவத்தை மறந்து விட்டார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டிய கள நிலவரம் காணப்படுகிறது. பொதுவாக ஈரான் தற்போது தங்களுக்கு அச்சுறுத்தலாக அரபு நாடுகளை தான் பார்த்து வருகின்றது. குறிப்பாக சவூதி அரேபியா, ஜோர்டான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் அமெரிக்கா ராணுவம் தாக்குதல் நடத்த தங்கள் நாட்டை அனுமதி தரலாம் என்று கருதுகின்றனர். அதே நேரத்தில் சகல வசதிகளும் நிறைந்த யு எஸ் ஆப்ரஹாம் லிங்கன் கப்பலை அங்கு அனுப்பி வைத்துள்ளது.

ஹிஸ்புல்லாஹ் சுமார் 30 எறிகணைகளுடன் வடக்கு இஸ்ரேலிய இராணுவ தளத்தை குறி வைத்து நடத்திய தாக்குதலில் மிகுந்த தேசத்தை

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

## கத்தார்...
(6ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலிய ராணுவம் முகாம் சந்திள்ளதாக ஐடிஎஃப் தெரிவிக்கிறது.

லெபனானை தளமாகக் கொண்ட ஹிஸ்புல்லா இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது, இராணுவ தளத்தை குறிவைத்ததாக கூறி, ஹிஸ்புல்லாவுடன் இணைந்த அல் மயாதீன் தளம் தெரிவித்துள்ளது.

லெபனானைத் தளமாகக் கொண்ட ஹிஸ்புல்லா இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது, இராணுவ தளத்தை குறிவைத்ததாக கூறி, ஹெஸ்பொல்லாவுடன் இணைந்த அல் மயாதீன் தளம், தி டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஹிஸ்புல்லாஹ் வீசிய ராக்கெட் கள் திறந்த வெளி பகுதிகளில் வீழ்ந்து வெடித்து சிதறியதாகவும் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெரிவித்தன.

ஆனாலும் இன்று வரை தொடர்ந்து ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தொடர் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் இஸ்ரேலிய வான் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை சாதனமான ஐயன் டோர்ம் முற்றிலுமாக இடைமறித்து தாக்குதல் நடத்தும் சக்தியை இழந்து விட்டது என்பது உறுதியாகிறது. இதன் மூலம் ஈரான் ஒரு வேளை இஸ்ரேலிய நாட்டின் மீது நேரடியாக தாக்குதல் நடத்த முற்பட்டால் அதன் விளைவு மிகவும் கடுமையாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.இந்த நிலையில் ஈரான் ராணுவம் மற்றும் அரச தலைமை அமைதி காக்கும் நிலையில் ஈரானின் திட்டம் குறித்து நாம் அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகிறது என்பதே உண்மையாகும். இருந்த போதிலும் இஸ்ரேலிய அரசும் அதன் தீவிர ராணுவ கடும் போக்காளார்களும் ஈரான் நாட்டின் தாக்குதலை எந்த வழியிலும் சந்தித்தே ஆக வேண்டும் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஈரான் அதன் இறையாண்மையை காப்பாற்றி கொள்ள வேண்டும் என்றால் அவர்கள் ஒரு தாக்குதலை கண்டிப்பாக இஸ்ரேலிய நாட்டின் மீது நடத்திய ஆக வேண்டும் என்கிற நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளார்கள் என்பதே இன்றைய நிலையாக உள்ளது.

இந்த போர் தற்போது வேறொரு பரிணாம சார்ந்த இலக்கை நோக்கி பயணிக்க ஆரம்பித்து விட்டது என்பதே உண்மையாகும். ஈரான் நாட்டின் துணை அமைப்புகளான (Proxy military force) ஹொதீக்கள், ஹிஸ்புல்லாஹ் மற்றும் அரபு துணை போராளிகள் சார்ந்த துணை குழுக்களை அத்தனை எளிதில் யாராலும் ஒடுக்கி விட முடியாது என்பதை நாம் கள முனையில் இருந்து வரும் செய்திகள் ஊடாக அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. ஹிஸ்புல்லாஹ்கள் தொடர்ந்து இஸ்ரேலிய நாட்டின் வட பகுதியில் தொடர்ந்து கத்யா ரக குறுகிய தூர ஏவுகணைகளை வீசி தாக்குதலை தொடர்ந்து நடத்தி வரும் நிலையில் இஸ்ரேலிய நாட்டின் வட பகுதியில் வாழ்ந்த மக்கள் அணைவரும் அந்த நாட்டின் மத்திய பகுதிக்கு புலம் பெயர்ந்து செல்ல கூடியதை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த தீவிர பிரச்சினையில் இஸ்ரேலிய ராணுவம் முழுமையாக இந்த போரில் தோல்வி அடைந்து விட்டதை அவர்கள் பரிபூரணமாக ஒப்பு கொண்டே ஆக வேண்டும். அதேநேரத்தில் இஸ்ரேலிய அரச தலைமை இதனை ஒப்பு கொள்ள தயங்கி வரும் நிலையில் அந்த நாட்டின் எதிர் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் மிகப் பெரிய அளவில் ஆன போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதே இதற்கு சாட்சியாக இருந்து வருகிறது என்பதை சர்வதேச நாடுகள் அனைத்தும் புரிந்து கொண்டு உள்ளதையும் யாரும் மறுக்க இயலாது.

தற்போதைய கள நிலவரப் படி யூத கடும் போக்குவாத அரசியல் கட்சியின் ஆதரவைப் பெற்று ஆட்சியில் இருக்கும் பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசிற்கு எதிராக மக்கள் பல்வேறு இடங்களில் போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.அதே போல் இஸ்ரேலின் பிரதான எதிர்கட்சிகள் பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசு முழுமையாக தோல்வி அடைந்து விட்டது என்பதை வெளிப்படையாக அறிவிப்பு செய்து வரும் நிலையில் இனி அதிக காலம் அவர்களால் இந்த போரை தொடர்ந்து நடத்த முடியாது. குறிப்பாக பாதுகாப்பு அமைச்சர் யோ காலன் மற்றும் பெஞ்சமின் நிதான்யாகு விற்கு இடையான முறுகல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில் இந்த போரின் காரணமாக இஸ்ரேலிய நாடு மிகுந்த அளவில் ஆன பொருளாதார ஸ்திரத்தன்மையை முழுமையாக இழந்து விட்டது. குறிப்பாக இஸ்ரேலிய நாட்டில் சுற்றுலா மற்றும் உள்நாட்டு உற்பத்தி, கடல் வணிகம், ஏற்றுமதி, இறக்குமதி, விலைவாசி உயர்வு என்ற அளவில் மிகப் பெரிய அளவில் ஆன சிக்கலை சந்தித்து வருகிறது.இதனை சரிகட்ட பல தசாப்தங்கள் கூட ஆகலாம் என்பதை உண்மையாகும். ஆகவே தான் அமெரிக்காவில் வாழும் 100 ரபிக்கள் (யூத அறிஞர்கள்) உடனடியாக போர் நிறுத்தத்தை அறிவிப்பு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுவித்து வருகின்றனர்.

இது போன்ற ஒரு மோசமான போர் பொறி முறைகளை கண்டு கொண்ட போதிலும் இஸ்ரேலிய தேசம் இனி அந்த பிராந்தியத்தில் வெல்ல முடியாத சக்தி என்கிற மாயை முற்றிலுமாக தகர்க்கப்பட்டது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை என்பதை யதார்த்தமான நிலையாக இருக்கிறது.இதனை யூத ராணுவம் மற்றும் அதன் தலைவர்கள் தொடர்ந்து மறுத்து வந்த போதிலும் அமெரிக்காவிற்கு இந்த பிராந்தியத்தில் மிகுந்த அவமானத்தை ஏற்படுத்தலாம் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அமெரிக்கா... இஸ்ரேல் என்பது ஒரே தேசமாக இணைந்து தான் இந்த போரை நடத்தி வருகின்றது. அந்த வகையில் அமெரிக்கா அதன் ராணு ஆலோசனை குழுவும் ஹமாஸ், ஹொதி குழுக்கள் மற்றும் ஹிஸ்புல்லாஹ் ராணுவ அமைப்பை எந்த நிலையிலும் அசைத்து பார்க்க இயலாதது சர்வதேச அளவில் மிகப் பெரிய அளவில் ஆன அதிர்ச்சி தரக்கூடிய செய்தி என்பதில் நிச்சயமாக சந்தேகம் இல்லை என்பதை சர்வதேச நாளிதழ்கள் செய்திகள்னுடாக நாம் புரிந்து கொள்ள முடிகிறது.இதனை தான் வாஷிங்டன் போஸ்ட், நியூயார்க் டைம்ஸ் செய்தியாக வெளியிட்டு வருகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் நேசநாட்டுப் படைகள் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று வெளிப்படையாக அறிவித்துள்ளார்கள். இருந்த போதிலும் அமெரிக்கா அரசின் அதிகார வரையறைக்குள் வரும் அமெரிக்கா செனட் சபை விவாதத்தில் தற்போதைய நிலையில் இஸ்ரேலிய அரசிற்கு 3 பில்லியன் அமெரிக்க டாலர்களை தருவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த மூன்று பில்லியன் டாலர் தொகையை வழக்கமாக அமெரிக்கா ஒதுக்கி செய்யும் நிலையில் அதனையடுத்து 20 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள ஜெட் மற்றும் ராணுவ தளவாடங்களை விற்பதற்கு வியாபார ரீதியாக ஒப்பந்தத்தை அறிவிப்பு செய்து உள்ளது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் வெகு காலமாக சவூதி அரேபியா நாடு கேட்டு வந்த 700 மில்லியன் மதிப்புள்ள ராணுவம் தொழில்நுட்ப சாதனங்களை வழங்கவும் முடிவு செய்து சவூதி அரேபியாவை அமெரிக்கா மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்பதே உண்மையாகும்.

ஆகவே அமெரிக்கா அரசு எல்லா நிலைகளிலும் யூத ராணுவம் மற்றும் அதன் செயல்பாடுகளை முற்றிலுமாக ஏற்று கொள்ள வேண்டிய தேவை எங்கிருந்து வந்தது என்பதை நாம் அறிவோம். மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பெரும்பாலான எண்ணெய் வளத்தை ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு சென்று விட கூடாது என்பதில் தான் அவர்கள் ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில் இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவம் மற்றும் செயல்பாடுகள் தோல்வி அடைந்து விட கூடாது என்பதில் அவர்களுக்கு இருந்த மேலான அக்கறை தான் ஹமாஸ் மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான வரம்பற்ற தாக்குதலுக்கு இத்தனை கோடி பில்லியன் அமெரிக்க டாலர்களை கொடுத்து உதவி செய்வதை நாம் அறிந்து கொள்ளலாம். அமெரிக்க வெளிப்படையாக மனித உரிமைகள் குறித்து பேசிய நிலையிலும் 40,000 பேர் படுகொலை செய்யப்பட்ட பிறகும் இஸ்ரேலிய ராணுவ செயல்பாடுகளை முன்னேற்றம் அடைய கூடிய அளவில் பெரிய அளவில் ஆன டாலர்களை அதன் ராணுவ செயல்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்து உதவி புரிகிறது என்பதில் இருந்து அதன் எண்ணெய் வளம் சார்ந்த ஒற்றை அரசியல் மற்றும் இஸ்ரேலுக்கான ராணுவ உதவிகள் ஆகியவை ஒரே புள்ளியில் இணைகிறது என்பதே யதார்த்தமான உண்மையாகும். நாங்கள் புரியும் வகையில் சொல்லப் போனால் மத்திய கிழக்கு நாடுகளில் நிறைந்த அமைதியற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கவே அமெரிக்கா மற்றும் யூத அரசு தலைமை முயற்சி செய்து வருவதைக் நாம் காண கூடியதாக இருக்கிறது.

அதேநேரத்தில் ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஹொதிக்களுக்கான நிதி ஆதாரங்கள் வரும் வழிகளை தடை செய்யும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் எடுத்து வருகின்றன.மத்திய தரைக்கடல் பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு வியாபாரத்தில் ஹிஸ்புல்லாஹ்க்கள் ஈடுபட்டு வரும் நிலையில் அதனை தடை செய்ய அமெரிக்கா முயற்சிக்கிறது.

குவார்ட்சு படைகள் மூலம் ஈரான் எண்ணெய் வியாபாரம் செய்வதாக 18 கப்பல்களை இஸ்ரேலிய அரசு தடை உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் இது பயங்கரவாத நிதி ஆதாரங்கள் அடிப்படையில் இந்த தடையை இஸ்ரேலிய அரசு பிறப்பித்துள்ளது என்று இஸ்ரேலிய ராணுவ துறை அமைச்சர் யோ கெலன் தெரிவித்து உள்ளார். 40,000 க்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் குழந்தைகளை படுகொலை செய்த நிலையில் இஸ்ரேலிய அரசும் அதன் தலைமையும் பயங்கரவாதம் குறித்து சர்வதேச மனித சமூகத்திற்கு பாடம் எடுப்பது என்பது நமக்கு மிகவும் மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய சூழலில் அரபுகள் இடையே இணக்கமான சூழ்நிலை காணப்படவில்லை . ஆனாலும் சவூதி அரேபியா , ஜோர்டான், யுஏஇ , மஸ்கட் எகிப்து போன்ற நாடுகள் அமெரிக்காவின் ஆதரவாளர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி கடந்த காலங்களில் நடைபெற்ற இஸ்ரேலிய நாட்டிற்கு எதிரான போரை தற்போது நடந்து வருகிற போர் முனை தாக்குதலுக்கு ஒப்பிட்டு பார்ப்பது ஏற்புடையதாக இருக்காது. ஒரு கட்டத்தில் ஈரான் வலுவான நிலையில் போரில் ஈடுபட்டால் அது மிகுந்த கவலைக்குரிய விடயமாக மாறி விடும் ஆபத்து இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. அதே சமயம் இஸ்ரேலிய ராணுவம் அமெரிக்கா அரசின் ஆதரவுடன் மட்டுமே செயல்பட வேண்டிய பலம் குறைந்த நிலையில் இருக்கிறது. தற்போதைய ஈரானின் ஆயுத பலம், ட்ரோன் தயாரிப்பு தொழில்நுட்ப கட்டமைப்புகள், அணு ஆயுத வல்லமைகள் , ரஷ்யா, சீனா, வட கொரியா போன்ற வலுவான ஆதரவை வெளிப்படையாக பெற்றுள்ள நிலையில் இஸ்ரேலிய அரசு எதிர் கொள்ள அஞ்சும் அளவுக்கு நிலைமை மாறி உள்ளது குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில் ஆயுத பலம் மூலம் மட்டுமே எந்தவொரு தேசமும் நிரந்தரமாக வெற்றி பெற சாத்தியக்கூறு இல்லை என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தற்போதைய நிலையில் 10 போரில் பெஞ்சமின் நிதான்யாகுவால் வெற்றி பெற முடியவில்லை என்கிற குரல்கள் வலுவான நிலையில் எழுந்துள்ளது . இஸ்ரேலிய நாட்டின் பல இலட்சக்கணக்கான மக்கள் சொந்த நாட்டில் இடம் பெயர்ந்து வாழும் சூழல் உருவாகியுள்ளது. போரில் ஈடுபட்ட தன்னார்வ யூதர்கள் பலர் தங்கள் தொழில்களை முழுமையாக இழந்து தவிக்கும் நிலை காணப்படுகிறது. 10000 க்கு மேற்பட்ட இஸ்ரேலிய ராணுவததிர் இது வரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் வாழ்நாள் முழுவதும் முடமாக மாறி விட்ட நிலையில் இன்னும் எத்தனை காலம் தான் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு இந்த போரை தொடர்ந்து நடத்துவார் என்கிற கேள்விக்கு பதில் மிகவும் விரைவில் கிடைக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ளும் காலம் விரைவில் நிகழும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்...!

# மாணவர் சந்தை நிகழ்ச்சி




(எம். எப். றிபாஸ்)

மாணவர் சந்தை நிகழ்ச்சி அட்டாளச்சேனை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு வலயத் தலைவர் எம்.ஐ.ஜௌபரின் நெறிப்படுத்தலின் கீழ் அதிபர் ஏ. சீ.நியாஸ் தலைமையில் தரம் மூன்று மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ரீ.எம். சியாத், ஏ.கே. அனீஸ், எம். ஏ. சுஹைரா, ஏ.ஜே.றினீஸ், ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

தரம் மூன்று மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள்,மணவர்கள், என பலரும் கலந்து கொண்டு மாணவர் சந்ததையில் வைக்கப்பட்டுள்ள பொருட்களை பார்வையிட்டனர்.



# மாகாண ஆணையாளராக வைத்தியர் நபீல் நியமனம்!




(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளராக வைத்தியர் எம்.ஏ.நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் பதில் கடமையாற்றும் பொருட்டு அன்மையில் நியமிக்கப்பட்டவர் ஓய்வுபெற்றுச் சென்ற நிலையில், ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, பிரதி மாகாண ஆணையாளராக கடமையாற்றி வந்த வைத்தியர் எம்.ஏ.நபீல் நியமிக்கப்பட்டு இன்றைய தினம் (13) தனது கடமையை திருகோணமலை சுதேச மருத்துவ திணைக்களத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்றைய தினம் (12) வழங்கி வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கட்சி மோதல்களைத் தவிர்த்து ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்றுவோம்

## ஜனாதிபதி ரணில் வேண்டுகோள்

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

அனுரவோ, ஹர்ஷவோ ஹந்துநெத்தியோ வரவில்லை. நாம் உரம் வழங்கினோம். விவசாயிகள் விளைச்சலை தந்தனர்., சவால்களைக் கண்டு தப்பியோடிய சஜித்தும், அனுரவும் மக்களின் கஷ்டங்கள் பற்றி பேசுவது வேடிக்கையானது. உண்மையாகவே அவர்களுக்கு மக்கள் கஷ்டம் புரிந்திருந்தால் அன்றே ஆட்சியை ஏற்று தீர்வு தந்திருக்க வேண்டும்.

"இயலும் ஸ்ரீலங்கா" தேர்தல் மேடையானது நாட்டை பிரிக்கும் இடமல்ல. மாறாக அனைவரும் ஒன்றிணைவதற்கான மேடையென தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாட்டு மக்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதே தனது நோக்கமாகும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்படும் தொடர் பொதுக்கூட்டத்தின் முதலாவது பேரணி அனுராதபுரத்தில் ஆரம்பமானது. கட்சி, நிற வேறுபாடுகள் இன்றி ஏராளமான மக்கள், சல்காது மைதானத்தில் திரண்டதுடன் அவர்கள் ஜனாதிபதியை மிகவும் அன்புடன் வரவேற்றனர்.

இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியவர்கள் சஜித் பிரேமதாசவோ, அனுர திஸ ாநாயக்கவோ, ஹர்ஷ டி சில்வாவோ, சுனில் ஹந்துன்நெத்தியோ அல்ல என்று தெரிவித்த ஜனாதிபதி, தமது அரசாங்கம் போதியளவு உரங்களை வழங்கிய போது, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வெற்றிகரமான அறுவடையை வழங்கிய விவசாயிகளே, இந்நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றியதாக நினைவு கூர்ந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், அனுர திஸ ாநாயக்கவும் இன்று மேடைகளில் மக்களின் சுமைகளைப் பற்றி பேசுவது வேடிக்கையானது எனவும், உண்மையில் மக்கள் படும் துன்பம் அவர்களுக்குத் தெரிந்திருந்தால் ஆட்சி அதிகாரத்தைப் பெற்று, மக்களின் பிரச்சினைகளுக்கு அன்றே தீர்வு வழங்கியிருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அன்று கேஸ் சிலிண்டர் 6800 ரூபாவிற்கு சென்ற போது சஜித் பிரேமதாசவும் அநுர திஸாநாயக்கவும் எங்கே இருந்தார்கள் என்று கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, இந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாவிட்டால் இந்த மேடையில் வந்து அமர்ந்துகொள்ளுமாறு அழைப்புவிடுத்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

"கட்சிகளை உடைப்பதற்காக நாம் இன்று ஒன்று கூடவில்லை. கட்சிகள் ஒன்றுகூடி நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வந்துள்ளோம். எம்மை ஆசீர்வதிக்கவே மழையும் பெய்தது. அதனால் கட்சி பேதமின்றி சுயாதீனமாக சிலிண்டர் சின்னத்தில் போட்டிடுகிறேன்.

மற்றைய தலைவர்கள் ஓடிப்போன வேளையில், முடியும் என்று நாட்டை மீட்க வந்தவர்கள் எம்மோடு உள்ளனர். அதனால் எனது அணியில் அனைவரும் ஒன்றுபட்டு முன்னோக்கிச் சென்று எதிர்காலத்தைப் பாதுகாப்போம். என்னுடையதோ பிரதமருடையதோ எதிர்காலம் இங்கு பாதுகாக்கப்படாது.

கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. அன்று நாட்டில் மின்சாரம் இருக்கவில்லை, இருளில் இருந்தோம். எரிபொருள் இருக்கவில்லை, நடந்து சென்றோம். கேஸ் இருக்கவில்லை, சிலிண்டர் மட்டுமே இருந்தது, அதையும் விற்றோம். மருந்து இருக்கவில்லை, மக்கள் வீதிகளில் உயிரிழந்தனர். ஹோட்டல்கள் மூடப்பட்டன, தொழிற்சாலைகள் முடங்கின. அப்போது நானும் பிரதமரும் மட்டுமே நாட்டை ஏற்க முன்வந்தோம்.

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினர். எதிர்கட்சித் தலைவர் ஓடிவிட்டார். அனுரவைத் தேடவே முடியவில்லை. டொலரின் பெறுமதி 370 ரூபாயாக உயர்ந்தது. கேஸ் சிலிண்டர் ரூ.4900 வரை அதிகரித்தது. பெற்றோல் ஒக்டேன்-92 இன் விலை ரூ.470 வரையில் அதிகரித்தது. ஒடோ டீசல் ரூ.460 வரையில் அதிகரித்தது. மண்ணெண்ணெய் விலை ரூ.460 வரையில் அதிகரித்தது. பஸ் கட்டணமும் மின் கட்டணமும் அதிகரித்தது. மக்கள் கடுமையாகத் துன்பப்பட்டனர். அப்போது சஜித்தும், அனுரவும் எங்கு இருந்தனர்?

மக்கள் கஷ்டம் புரிந்திருந்தால் ஆட்சியை ஏற்றிருக்க வேண்டும். எதிர்கட்சி எந்த வேளையிலும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கத் தயாராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இரண்டாம் எதிர்கட்சி ஏற்க வேண்டும். அவர்கள் எங்கு இருந்தனர்? கேஸ் சிலிண்டர் விலை ரூ.4900 இற்கு கூடியபோது அனுர, சஜித் எங்கு இருந்தனர்? இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும்.

இன்று அனுராதபுரத்தில் ஆரம்பித்து சஜித், அனுரவிடம் இந்தக் கேள்விகளை எல்லா மேடைகளிலும் கேட்பேன். பதில் இருந்தால் கூறுங்கள், இல்லாவிட்டால் எனது மேடையில் இரு பக்கங்களில் வந்து அமருங்கள்.

அன்று உயர்வடைந்த சிலிண்டர் விலை இன்று குறைந்துள்ளது. அதனால் சிலிண்டர் சின்னத்தை ஏற்றுக்கொண்டேன். பெற்றோல் டீசல் விலைளையும் குறைத்துள்ளோம். பஸ் கட்டணமும் மின் கட்டணமும் குறைந்துள்ளன. இதனால் மட்டும் திருப்தியடைய முடியாது. இது ஆரம்பம் மட்டுமே. இன்னும் நீண்ட தூ ரம் செல்ல வேண்டியுள்ளது. நாட்டில் உரம் இருக்கவேயில்லை. இந்தப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சஜித்தோ அனுரவோ ஹர்ஷ வோ ஹந்துன்னெத்தியோ அன்று முன்வரவில்லை. நான் உரம் பெற்றுத் தந்தேன், நீங்கள் விளைச்சலைத் தந்தீர்கள், நாம் வெற்றி கொண்டோம்.

இதற்கு மக்களுக்கு நன்றி! நான் இந்த நாட்டை கட்டியெழுப்புவேன். ஏயுவு வரி அதிகரிக்கப்பட்டபோது மக்கள் பட்ட கஷ்டங்களை நான் அறிவேன். கஷ்டப்பட்ட அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கினோம். அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 55 ஆயிரம் வரையில் அதிகரித்தோம். வங்குரோத்து நாட்டிலேயே அதனைச் செய்தோம்.

அஸ்வெசும வழங்கினோம், சமுர்த்தி போன்று மூன்று மடங்கு வழங்கினோம். சிரேஷ்ட பிரஜைகளுக்கு நிவாரணம் வழங்கினோம். அங்கவீனமுற்றோருக்கு நிவாரணம் வழங்கினோம். ஜனாதிபதி நிதியத்தில் புலமைப்பரிசில் வழங்கினோம். உறுமய திட்டத்தில் காணி உறுதிகள் வழங்கினோம். தற்காலிகமான உறுமய திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. தேர்தலுக்குப் பின்னர் தனி அதிகார சபையின் கீழ் இரு வருடங்களில் இந்தத் திட்டத்தை நடத்தி முடிப்போம், அதற்கான சட்டமும் கொண்டு வரப்படும். கொழும்பில் வீட்டு உரிமைகளை மக்களுக்கு வழங்குகிறோம். தோட்டப் பகுதிகளை கிராமங்களாக பிரகடனப்படுத்த முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

உரிமைகளைப் பகிர்வதே புரட்சியாகும். 18 நாடுகள் எமக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக உதவிகளை வழங்கின. நாம் முன்னேற்றத்தை எட்டினால் சர்வதேச நாணய நிதியம் 13 பில்லியன் டொலர் நிவாரணம் வழங்குவதாகக் கூறியுள்ளது. எனவே அதற்கான வேலைத்திட்டத்தை தொடர வேண்டும். அனுரவும் சஜித்தும் அதனை மாற்றுவதாகக் கூறுகிறார்கள். அதனை மாற்றிவிட்டு மீண்டும் அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரித்து மின்சாரம் இன்றி இருக்க வேண்டுமா? இல்லாவிட்டால் அப்படியான பிரச்சினைகள் வரும்போது அதனைத் தீர்மானிக்க முடியாமல் ஓடி விடுவார்களா?

நான்கு வருடங்கள் தொழில் கிடைக்காத இளையோருக்கு தொழில் வழங்கும் திட்டமும் எம்மிடம் உள்ளது. அதற்காக விவசாய நவீனமயப்படுத்தல் திட்டம் ஆரம்பிக்கப்படும், தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும். ஜே.ஆர்.ஜயவர்தன காலத்தில் கலாசார முக்கோணத்தை அமைத்து தம்புள்ளை, சீகிரிய பகுதிகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தினோம். அதேபோல் அனுராதபுரத்தை மேம்படுத்த எதிர்பார்க்கிறோம். அனுராதபுரத்தை பௌத்த மத்தியஸ்தானமாக மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம். அதற்காக மகா விகாரை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்படும்.

நாம் முன்னேறிச் செல்வோம். உங்கள் எதிர்காலத்தை எம்மிடம் விட்டுவிடுங்கள், சிலிண்டருக்கு வாக்களியுங்கள்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.



# நேர்மையான அரசியல்வாதியான சஜித்திடம் நாட்டை ஒப்படைக்கலாம் கட்சியின் உயர்பீட அனுமதியுடனே முடிவெடுத்தோம்

## - ரிஷாட் தெரிவிப்பு -

தலைமைத்துவத்தின் தீர்மானத்துக்கு கட்டுப்படுவதற்கு மக்கள் இணங்கியதாலும், கட்சியின் அரசியல் உயர்பீடத்தில் நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் 31 வாக்குகள் கிடைத்ததாலுமே, சஜித் பிரேமதாசவை ஆதரிக்க தீர்மானித்ததாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு, கொழும்பு, சினமன் லேக்சைட் ஹோட்டலில் (15) இடம்பெற்றது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பியும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயலாளர் சுபைர்தீனும் கைச்சாத்திட்டனர்.

இங்கு உரையாற்றிய மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்ததாவது,

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளோம். கட்சியின் உயர்பீடத்தில் இது குறித்து இரகசிய வாக்களிப்பு நடைபெற்றபோது கலந்துகொண்ட 47 பேரில், 31 பேர் சஜித்தை ஆதரித்தனர். நாடு பூராகவும் சென்று மக்களிடம் கருத்துக்கேட்டபோது, கட்சியின் உயர்பீடத்தின் முடிவுக்குக் கட்டுப்படுவதாக தெரிவித்தனர். இதனால்தான், சஜித்பிரேமதாசவை ஆதரிக்கிறோம்.

இனவாதமில்லாத, வாக்குறுதிகளைக் காப்பாற்றும் நேர்மையான அரசியல்வாதி சஜித். அவருக்கு வழங்கப்படும் சன்மானங்களை மக்களுக்கே அன்பளிக்கும் உயரிய சிந்தனையாளர்.



எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்படும் சஜித் பிரேமதாச, தனது சொந்த தொகுதிக்கு மட்டுமின்றி முழு நாட்டுக்குமே உதவி செய்கிறார். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் தூரநோக்கோடு செயற்படும் இவர், நானூறு கற்றல் திரைகளை பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளார். பாடசாலைகளுக்கு பஸ்வண்டிகளை அன்பளிப்புச் செய்யும் கலாசாரத்தை சஜித் பிரேமதாசவே அறிமுகஞ் செய்தார். என்பதே அதுவாகும்" என்று அவர் குறிப்பிட்டார்.

# மூதூர் அல் முபஷ்ஷிரா சிறார்களுக்கு கற்பித்தல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தேசிய காங்கிரஸ் தேசிய தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லா அவர்களது நிதி ஒதுக்கீட்டில் தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் டொக்டர் முஹம்மட் ஷியா அவர்களது சிபாரிசின் பேரில் மூதூர் அல் முபஷ்ஷிரா பாலர் பாடசாலை சிறார்களுக்கான கற்பித்தல் உபகரணத் தொகுதி மற்றும் அதனோடு சேர்ந்த இதர சில பொருட்களும் அண்மையில் கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வானது தேசிய காங்கிரஸ் கட்சியின் மூதூர் கிளை உறுப்பினர்கள் ஊடாக சிறப்பான முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டு டொக்டர் முஹம்மட் ஷியா, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான சுக்ரி, ரிம்சான் , மூதூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எம்.ஹரீஸ் மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பங்குபற்றுதலுடன் மூதூர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

# கல்முனை ஜாமிஆ மன்பயில் ஹிதாயா அறபுக்கலாபீட நிர்வாகிகளின் கலந்துரையாடல்



(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

கல்முனை ஜாமிஆ மன்பயில் ஹிதாயா அறபுக் கலாபீட நிர்வாகிகள் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு கலாபீட காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்கா ஷரீப் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டதோடு, ஜாமிஆவின் கடந்தகால சேவைகள், தியாகங்கள், அர்ப்பணிப்புகள் நன்றியுடன் நினைவு கூறப்பட்டதோடு எதிர்காலத்தில் ஜாமிஆவின் பணிகளும் பங்களிப்புகளும் கல்முனை மண்ணிற்கான அவசிய நிலைகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

கல்முனை பிரதேசத்தின் இருபெரும் பள்ளிவாசல்களுடன் ஜாமிஆ கலாபீடம் இணைந்து வெகுவிரைவில் வேகமான முன்னேற்றங்களை அடைவதற்கான விருப்பங்கள் அனைவருக்கும் மத்தியில் உடன்பாடு காணப்பட்டன.




# வாசிப்பு ஆன்மாவை போசிக்கும் மிகப்பெரும் வணக்கம்

வாசிப்பு ஆன்மாவை போசிக்கும் மிகப்பெரும் வணக்கம்.

அதுவே முதல் வணக்கம்.

அதுவே நாகரிக உருவாக்கத்தின் முதற்படி. வாசிக்காதவன் அரை மனிதனாகவும் வாழத்தெரியாதவனாகவும் மாறி விடுகின்றான்.

இன்றைய நவீன யுகத்தில் வாசிப்பு ஒரு கலையாக ஒரு துறையாக ஆற்றலாக தோற்றப்படுகிறது வாசிப்பிலே ஈடுபாடு கொண்டவன் வாசிக்கும் ஆற்றல் பெற்றவன் வாழ்வை ஒழுங்கமைத்து வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு தயாராகின்றான். வாசிக்க தெரியாதவன் வாழத் தெரியாதவனாக சவால்களை வெல்ல தெரியாதவனாக மாறிவிடுகின்றான்.

எமது சன்மார்க்கமான இஸ்லாத்தை பொறுத்தளவில் அது இறுதி வேதம். மறுமை வரை அல்குர்ஆன் முன்வைக்கின்ற போதனைகளே வழிகாட்டியாக இருக்கும். அந்த அடிப்படையில் அல்குர்ஆன் முன்வைத்த முதலாவது இறை கட்டளை வாசிப்பீராக . என்பது தான். அந்த வகையில் எம்மைப் பொறுத்தளவில்

வாசிப்பு ஒரு வணக்கம்.

வாசிப்பு ஒரு வழிபாடு.

வாசிப்பு ஒரு சிகிச்சை முறை.

வாசிப்பு ஒரு வாழ்வியல் முறைமை.

வாசிப்பு ஓர் அனுபவம்.

வாசிப்பு ஒரு தவம்.

வாசிப்பு உன்மத்தம் பிடித்த ஒரு பித்துநிலை.

வாசிப்பு ஒரு கலை. வாசிப்பு மிகப்பெரும் திறன். இருபத்தோராம் நூற்றாண்டு வேண்டி நிற்கின்ற பலம் வாய்ந்த திறன்.

மனித வாழ்வு இந்த பூமியில்தான் நிலைத்து நிற்கும். எனவே அவன் வாழ மிகப் பொருத்தமாக உள்ள இந்த பூமியை மனிதன் மாத்திரமே பலப்படுத்தி செப்பனிட்டு பயன்படுத்த வேண்டும். அதனால் தான் இறைவன் மூலம் மனிதன் இந்த பூமியை மிகவும் சிறப்பாக வளப்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளான். மனிதன் இந்த பூமியில் இறைவனின் பிரதிநிதியாக படைக்கப்பட்டுள்ளான். அல்லாஹ்வை வணங்குவது அவனது தலையாய பணி.

அல்லாஹ் அவனை நோக்கி பேசிய முதலாவது கட்டளை "வாசி" என்பதுதான். வாசிப்பதால் தான் அவனது சிந்தனை விரிகின்றது. ஆன்மா அசைகின்றது. அதனால்தான் அவனால் பூமியை வளப்படுத்தவும் வணக்கத்தில் உயிரோட்டமாய் லயிக்கவும் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும் இருந்து உலகாளவும் முடிகிறது.

ஆன்மா செழுமைபெற அடியான் வாசிக்க வேண்டும். வாசிப்பு அவனது சிந்தனைக்கான தீனியாகிறது.

வாசிப்புக்கு எழுத்து அச்சாணியாக உள்ளதால் எழுத்தின் மீதான சத்தியம் அல்குர்ஆன் எங்கும் விரவிக்கிடக்கிறது.

மனித வாழ்வில் மொழியும் எழுத்தும் வாசிப்பும் படைத்த இறைவனின் வல்லமையை உணர்த்திக்கொண்டே இருக்கிறது. மொழியின் பன்மைத்தன்மை அருள் வளம் நிறைந்தது.

எனவேதான் அல்லாஹ் அவனது வேதங்களை வித்தியாசமான நான்கு மொழிகளில் அருளியுள்ளான்.

எல்லா தூதர்களும் அவரவர் சமூகத்துக்கு அந்தந்த மொழியிலே வாழ்வு குறித்து போதித்தனர். வணக்க வழிபாடுகள் குறித்தும் போதித்துள்ளனர்.

அந்தந்த மொழி குறித்து நாம் புலமை பெற்றிருக்க வேண்டும். அந்தப்புலமையை உருவாக்கும் பிரதான நுழைவாயில் அந்த மொழியினூடான வாசிப்பாகும். வாசிப்பு மிகப்பெரும் வணக்கம். அதற்கு எல்லையோ நிபந்தனைகளோ இல்லை. ஆனால் அது இறுதி மூச்சுவரை தொடர வேண்டும்.

எனவே தான் இறுதி வரை உலகில் உயிர் வாழ உள்ள இறைவேதத்தை அல்லாஹ் நூல் என்கிறான்.

அதன் ஒவ்வொரு எழுத்தும் உச்சரிக்கப்படுகையில் நன்மை எழுதப்படும் என்கிறான்.

அல்குர்ஆன் மனித சிந்தனைக்கு அழைப்பு விடுக்கிறது. அவனது அவதானத்தை கூர்மையாக்கிறது. காலமாற்றத்துக்கு ஏற்ப அல்குர்ஆன் புதிய கருத்துக்களையும் சிந்தனைகளையும் அவனுக்கு வழங்குவதனூடாக தன்னை தன் இருப்பை தக்கவைக்கிறது. எனவே அது வாசிக்கப்பட வேண்டும் என்கிறது. மனிதன் பகுத்தறிவு மிக்க விலங்கு.

அவன் தனது அறிவை விசாலிக்க வாசிப்பு மட்டுமே மகத்தான வழிகாட்டுகிறது. வாசிப்பு அவனை வழிநடாத்துகிறது. வடிவமைக்கிறது. வாசிப்பின் மூலமாக அவன் சிந்திக்க ஆரம்பிப்பான். கருத்துக்கூறவும், வினாத்தொடுக்கவும் விடயங்களை அலசி ஆராயவும் முற்படுகின்றான்.

வாசிப்பு நாகரீகத்துக்கு அத்திவாரமிடுகிறது. அறியாமையை அகற்றுகிறது. ஆன்மாவை உசுப்புகிறது. சிந்தனையை கிளறி விடுகிறது. அவனை செதுக்கி விடுகிறது. வாசிப்பு என்பதை ஒடுங்கிய வட்டத்தில் அடைத்து விடாது அதன் விசாலமான அகன்ற கருத்தை நோக்கி நாம் நகர வேண்டும்.

ஆழமான வாசிப்பு எம்மில் அவதானத்தை உருவாக்கி விடும். அல்லாஹ்வை நோக்கி அழைத்துச்செல்லும். அன்றாடம் வாசிப்போம் அல்லாஹ்வை அருகாமைக்கு அழைப்போம். வாசிப்பால் வளம் பெறுவோம். வாசிக்கும் தலைமுறையை வழிகாட்டுவோம்.

# மக்களின் அரசாங்கத்தை விரைவில் அமைப்போம்

## எம்மோடு அணி சேருங்கள் – ஊடக சந்திப்பில் அனுர குமார அழைப்பு

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

ரணில் விக்கிரமசிங்கவிடம் நான் கூறுவது முதலில் அவ்வாறு தயாரிப்பவர்களிடம் ஒரு வாக்கெடுப்பினை நடத்துமாறு. தேசிய மக்கள் சக்தி உண்மையை அடிப்படையாகக் கொண்டே தனது தேர்தல் இயக்கத்தை முன்னெடுத்து வருகிறது. இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்துடனாகும். இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான நேர்மை, விடய அறிவுபடைத்த, நாட்டை கட்டியெழுப்புவதற்கான தென்புடையவர்களாக இடையீடு செய்கின்ற ஒரு குழுவை உள்ளடக்கியதுதான் தேசிய மக்கள் சக்தி. அது தான் அதிகாரத்தை கோரி நிற்கிறது. எனவே ரணில் விக்கிரமசிங்க என்ன கூறினாலும் சஜித் பிரேமதாஸ என்ன கூறினாலும் இந்த செப்டெம்பர் 21 ஆம் திகதி மக்களிடம் கேட்டுக்கொள்வது நீங்கள் விழிப்புடன் இருங்கள். தோன்றியுள்ள நிலைமையை மாற்றியமைப்பதற்கான மிகவும் பொறுத்தமான வாய்ப்பே உருவாகியிருக்கிறது. முதல் தடவையாக மக்களின் அரசாங்கமொன்றை அமைப்பதற்கான தருணம் உதயமாகியிருக்கிறது. இந்த நிலைமையை கைநழுவிச் செல்ல இடமளிக்காமல் நாம் அனைவரும் ஒன்று சேருவோமென எமது நாட்டின் வாக்களர்களுக்கும் புதுப் பிரஜைகளுக்கும் அழைப்புவிடுக்கிறோம்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

குறிப்பாக இந்த ஊடக சந்திப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டமைக்கான காரணம் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் இயக்கம் தொடர்பில் பதற்றமடைந்துள்ள குழுக்கள் முன்வைக்கின்ற குறைகூறல்கள் பற்றிய எங்கள் தரப்பிலான கருத்துக்களை முன்வைப்பதற்காகும். இந்த ஊடக சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் பல்வேறு பங்குதாரர்களான அமைப்புகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற தோழர்கள் பங்குபற்றுகிறார்கள்.

எங்களுக்குத் தெரியும் தற்போதய அரசியல் மிகவும் தீவிரமான பாசறைகளாக மாறியிருக்கின்றனது. எங்களின் எதிர் தரப்பான பாசறைகளின் ஒரே நோக்கமாக அமைவது இந்த பாராளுமன்றத்தில் நீண்டகாலமாக அமைச்சுப் பதவிகளை வகித்த அரசாங்கங்களை அமைத்தவர்களே இருக்கிறார்கள். அவர்களின் தேர்தல் இயக்கம் இந்த சிறப்புரிமைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதாகும். அதாவது இந்த நாட்டை அதலபாதாளத்தில் தள்ளிவிட்ட மோசடிகள் ஊழல்கள் நிறைந்த கலாச்சாரத்தை ஏற்படுத்திய குழுக்கள் பகிர்ந்து கொள்வதிலான மல்லுக்கட்டலில் ஈடுபட்டுள்ளார்கள். ரணில் விக்கிரமசிங்க ஒரு பகுதியை அபகரித்துக் கொள்ள முயற்சி செய்கிறார். நாமல் ராஜபக்ஷ ஒரு பகுதியை வைத்துக்கொள்ள முயற்சி செய்கிறார். சஜித் பிரேமதாஸ ஒன்றுசேர்ந்த குப்பை மேடுகளை சேர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறார். அதுதான் அவர்களின் தேர்தல் இயக்கம்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் இயக்கத்திற்கு நாங்கள் நீண்ட காலமாக தயாராகி வந்தோம். அதற்காக நாங்கள் பல்வேறு துறைகளை சார்ந்த அமைப்புக்களுடன் செயலாற்றி வந்தோம். சட்டத்தரணிகள் குழுக்கள், பொறியியலாளர்கள், கலைஞர்கள், தொழில்வாண்மையாளர்கள் இளைப்பாறிய முப்படை கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள், அதைபோலவே ஏனைய இளைப்பாறியவர்கள், வலது குறைந்தோர், கமக்காரர்கள், மீனவர்கள், இவர்கள் அத்தனைபேரையும் நாங்கள் திட்டமிட்ட அடிப்படையில் அணிதிரட்டி வருகிறோம்.

அதனால் மக்கள் பலமே எங்களின் சக்தியாக மாறியிருக்கிறது. அவர்களின் சக்தியாக மாறியிருப்பது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்த அங்குமிங்கு தாவிக்கொண்டிருக்கின்றவர்களை ஒன்றுசோக்கின்ற அரசியலாகும். அதனால் தற்போது இந்த அரசியல் போராட்டக் களத்தில் கொள்கைப்பிடிப்புள்ள ஒரே ஒரு அரசியல் பாசறைதான் இருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் அரசியல் பாசறையே அது. ஏனைய அரசியல் பாசறைகள் அனைத்துமே கொள்கை என்னவென்று கண்டுபிடிக்க முடியாத கட்சிகள் எது என அடையாளம் காணமுடியாத அளவிற்கு கலப்படைந்த பாசறைகளாக மாறியுள்ளது.

அதனால் நான் நினைக்கிறேன் இந்த தேர்தல் இயக்கத்தின் இந்த பாசறைகளின் பிரிகையிடலை உற்றுநோக்கினால் தேசிய மக்கள் சக்தியின் பலமான தன்மையும் அவர்களின் பலவீனமான தன்மையும் தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நாங்கள் கடந்த 17 ஆம் திகதி எங்களுடைய தேர்தல் இயக்கத்தை தென்னிலங்கையில் தொடங்கினோம். தங்காலை, மாத்தறை, காலியில் பிரதான கூட்டத்தொடர்களை நடாத்தி நேற்றும் கிரிபத்கொட, கொலன்னாவ, கடுவெல மக்களை சந்தித்தோம்.

மக்கள் எம்மை நோக்கி பெருந்திரளாக அணிதிரண்டு வந்தார்கள். எங்களுடைய ஒட்டுமொத்த தேர்தல் இயக்கமும் நாட்டுக்கு என்ன நேர்ந்தது? அதாவது இவர்கள் வரலாற்றில் என்ன செய்தார்கள்? தற்போது நாட்டிலுள்ள நிலைமை என்ன? இதிலிருந்து மீட்டெடுப்பதற்கான வழிமுறை என்ன? ஆகிய விடயங்களை தெளிவுபடுத்தவும் அதிலிருந்து மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் என்னவென்பதையும் அதற்கான மக்களின் இடையீடு பற்றியும் தெளிவுபடுத்துவதும் தான் எமது ஒட்டுமொத்த தேர்தல் இயக்கத்தின் உள்ளடக்கமாகும்.

ஆனால் எங்களுடைய எதிர்தரப்பினரின் தேர்தல் இயக்கம் என்ன? அவர்கள் மிகவும் பதறிப்போயிருக்கிறார்கள். நீண்டகாலமாக அங்குமிங்கும் ஊசலாடிக்கொண்டிருந்த அரசியல் இத்தகைய தனித்துவமான அரசியல் நிலைமாற்றமாக மாறுமென அவர்கள் ஒருபோதுமே எதிர்பார்க்கவில்லை. அந்த ஊழல் மிக்க நாசகார கும்பலிடமிருந்து பொதுமக்களின் இயக்கமொன்றுக்கு அதிகாரம் கைமாறுமென அவர்கள் கனவில் கூட நினைத்துப்பார்க்கவில்லை. இங்கும் அங்கும் மாறி மாறி தாவிக்கொண்டு அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள முடியுமென அவர்கள் சதாகாலமும் நினைத்தார்கள். சில வேளைகளில் மக்கள் அரசாங்கங்களை மாற்றுகிறார்கள். மக்கள் அரசாங்கங்களை மாற்றும்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் தரப்பினை மாற்றிக்கொள்கிறார்கள். இறுதியாக பார்க்கும்போது இவர்களில் பெரும்பாலானவர்கள் ஒன்றில் அமைச்சுப் பதவியை வகித்தவர்கள் அல்லது நீண்டகாலமாக பிரதியமைச்சர் பதவியை வகித்தவர்கள் அல்லது நீண்டகாலமாக அரசாங்கத்தில் இருந்தவர்களாவர்.

இவர்கள் தான் இப்பொழுது மூன்று குவியல்களாக பிரிந்திருக்கிறார்கள். நாங்கள் ஒரு பலம்பொருந்திய இயக்கம் என்ற வகையில் இதற்கு முகம்கொடுத்திருக்கிறோம். அவர்களின் சதாகால அரசியல் சூதாட்டமாக நிலவியது அங்குமிங்கும் அரசியல்வாதிகளை பொறுக்கியெடுத்து தோ□தல் மேடைகளில் ஏற்றி நாங்கள் இணைப்பிரியாத நண்பர்கள் என்று கூறி மக்களை ஏமாற்றுவதாகும். இப்போது அந்த அரசியல் முற்றாகவே நீங்கிவிட்டது.

கொள்கைப்பிடிப்புள்ள, திட்டமிட்ட அடிப்படையிலான அரசியலில் தேசிய மக்கள் சக்தி பிரவேசித்துள்ளது. அதனால் எதிரிகள் கட்டுக்கடங்காமல் பதறிப்போயிருக்கிறார்கள். மிகவும் பொய்யான, சமூகம் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளாத குறைகூறல்களை முன்வைத்து வருகிறார்கள். நாங்கள் அதிகாரத்திற்கு வந்தால் எத்கந்த விகாரையின் பெரஹெராவை நிறுத்துவோம் என குருணாகலில் ஐக்கிய மக்கள் சக்தி மேடையில் ஒரு உறுப்பினர் கூறினார்.

நான் இதைப்பற்றி ஒருபோதுமே கூறவேண்டுமென நினைக்கவில்லை. அந்த கூற்றினைவிடுத்த உறுப்பினர் முப்பது நாற்பது தடவைகளுக்கு மேல் எங்களை எடுத்துக்கொள்வீர்களாக என எங்களுக்கு பின்னால் வந்து கெஞ்சிக்கொண்டிருந்தார். அவர் எனக்கு வட்சப் மூலமாக செய்திகளை அனுப்பிவைத்திருக்கிறார் எங்களுக்கு சார்பாக அவர் குரல் கொடுத்ததாக, அந்த வீடியோக்களை எங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார். பாருங்களே உங்களுக்காக நான் எவ்வளவோ குரல் கொடுத்திருக்கிறேன் என்று. இவற்றையெல்லாம் நான் கூறவேண்டுமென நினைக்கவே இல்லை. ஆனால் இப்போது அவர் மேடையில் ஏறிக் கூறுகிறார் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் பெரஹெராக்களை நிறுத்திவிடுவதாக. அதனால் அதற்கு பின்னர் எங்களுடன் இணைந்து கொள்வதற்காக வரிசையில் நின்றுக்கொண்டிருந்தார். எனவே இவர்கள் மிகவும் கொச்சைத்தனமான குறைக்கூறல்களில் பிரவேசித்துள்ளார்கள். எனவே இந்த நாட்டின் நாகரீகம், இந்த நாட்டின் ஒழுக்கநெறிகள் கட்டியெழுப்பப்பட்டுள்ள விதத்தை நன்றாக உணர்ந்து கொண்ட அரசியல் இயக்கமே நாங்கள். ஒவ்வொரு மக்கள் சமுதாயத்திற்கும் தனக்கென தனித்துவமான அடையாளங்கள் இருக்கின்றன.

தனித்துவமான கலாச்சார வைபவங்கள் இருக்கின்றன. தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பு என்ன? அந்த தனித்துவமான கலாச்சார வைபவங்கள், சமய விழாக்கள், தனித்துவமான மதச் சம்பிரதாயங்கள் என்பவற்றை நன்றாக பாதுகாத்து, அவற்றுக்கு மதிப்பளித்து அவற்றை பாதுகாத்து வருங்கால சந்ததியினருக்கு ஒப்படைப்பதே தேசிய மக்கள் சக்தியின் நோக்கமாகும். ஆனால் அதற்கு எதிரான கருத்துக்களையே முன்வைத்து வருகிறார்கள்.

அதைப்போலவே நீங்கள் கண்டிருப்பீர்கள் இரத்தினபுரி பக்கத்திற்கு போய் நாங்கள் வந்ததும் சுரங்க வேலைகளை நிறுத்தி விடுவதாக கூறினார்கள். நாங்கள் வருவது இந்த நாட்டில் இரத்தினக்கல் கைத்தொழிலை விருத்தி செய்து, எங்களுடைய ஒட்டுமொத்த கொள்கை பிரகடனத்திலும் அதிகமான பங்கினை எங்களுடைய கனிம வளங்களை விருத்தி செய்தல் பற்றி குறிப்பிட்டிருக்கிறோம். எங்களுடைய இரத்தினக்கல் வளங்கள் இப்போது வீணாகிக்கொண்டிருக்கிறது. இரத்தினக்கல் கைத்தொழிலை எங்களால் விருத்தி செய்ய முடியும். இப்போது இரத்தினக்கற்களே இல்லாத ஹொங்கொங் போன்ற நகரங்கள் தான் இரத்தினக்கல் கேந்திர நிலையமாக மாறியுள்ளன. அதனை இலங்கைக்கு கொண்டுவருவது எங்களுடைய நோக்கமாகும். ஆனால் அதற்கு நேர்எதிரான கருத்துக்களையே அவர்கள் கூறிவருகிறார்கள்.

இப்போது புனைந்துள்ள புத்தம்புதிய கதை என்ன? சமூகத்தில் பீதிநிலையை விதைத்து வருகிறார்கள். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வந்தால் இப்படி நடக்கும், அப்படி நடக்கும் எனக்கூறுகிறார்கள். நாங்கள் தெளிவாகக்கூறுகிறோம் எமது நாட்டின் வரலாற்றில் அரசாங்கங்கள் மாறினால் எதிர் தரப்பினரை பழிவாங்குகின்ற வரலாறு தான் நிலவியது. உங்களுக்குத் தெரியும் 1977 இல் ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கத்தை அமைத்ததும் பொலிசுக்கு விடுமுறை வழங்கினார்.

பொலிஸிலிருந்த இளைப்பாறிய டி.ஐ.ஜி இற்கு அது தெரியும். அவ்வாறு விடுமுறை வழங்கி வீடுகளை தீக்கிறையாக்க, மக்களை படுகொலை செய்ய இடமளித்தார். அவர்கள் அப்படித்தான் தேர்தல் வெற்றியை கொண்டாடினார்கள். பின்னர் வீடுகளைத் தாக்கி தீமூட்ட தொடங்கினார்கள். மற்றவர்கள் மீது உலை எண்ணையை ஊற்றித்தான் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தில் தேர்தல் வெற்றியை கொண்டாடினார்கள். அந்த ஊழியர்களுக்கு வேலைக்கு வர இடமளிக்காமல் தான் இ.போ.ச. வெற்றியை கொண்டாடும். அந்த ஊழியர்களை கேற்றுக்கு உள்ளே வர இடமளிக்காமல் தான் துறைமுகத்திலுள்ளவர்கள் வெற்றியை கொண்டாடுவார்கள். அவ்வாறான அசிங்கமான அரசியல் கலாச்சாரம் தான் எமது நாட்டில் நிலவியது. நாங்கள் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கமொன்றை அமைக்கிறோம் என்றால் என்ன? எங்களுக்கு வாக்களித்த – எங்களுக்கு வாக்குகளை அளிக்காத எவருக்குமே இருக்கின்ற ஜனநாயக ரீதியான உரிமைக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். தமக்கு விருப்பமான அரசியலில் ஈடுபட, வாக்குகளை அளிக்க வாக்காளர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் எங்களுக்கு அரசாங்கம் என்ற வகையில் அந்த அனைவரையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு உண்டு. நாங்கள் எங்களுடைய அங்கத்தவர்களிடம் கேட்டுக்கொள்வதும் இந்த நாட்டுக்கு அறிவிப்பதும் தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு பின்னர் எந்த விதமான எதிர் தரப்பினருக்கும் எதிர் தரப்பினருக்கு வாக்களித்தவர்களுக்கும் ஒரு துளியேனும் பங்கமேற்படக்கூடிய வகையில் நடந்து கொள்ள வேண்டாம் என்பது தான். அதற்கு தேசிய மக்கள் சக்தி இடமளிக்கமாட்டாது. எங்களுடைய பொறுப்பு அது தான்.

அடுத்ததாக இவர்கள் குறைக்கூற தொடங்கியிருக்கிறார்கள் நாங்கள் தொழில் முயற்சிகளை பறிமுதல் செய்யப்போகிறோமெனை. நாங்கள் இவற்றை அளவிற்கு அதிகமாகவே கூறிவந்திருக்கிறோம். எனவே தற்போது அவர்களுடைய ஒட்டுமொத்த தோ□தல் இயக்கமும் குறைக்கூறல் என்கின்ற தொனிப்பொருளிலேயே இயங்கி வருகிறது. நான் கண்டேன் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார் ராஜபக்ஷ தப்பியோடிய வேளையில் அரசாங்க பொறுப்பினை ஏற்குமாறு எங்களுக்கு அழைப்பு விடுத்தார்களாம் நாங்கள் ஓடி ஒளிந்தோமென. ரணில் விக்கிரமசிங்க அவர்களே நீங்கள் ஒரு ஜனாதிபதி. ரணிலின் அளவிற்கு அதைக்கூறினால் பரவாயில்லை. ஆனால் ஜனாதிபதி பதவிக்கு அவ்வாறான விடயங்களை கூறுவது பொறுத்தமற்றது. நன்றாகவே தெரியும் தேசிய மக்கள் சக்திக்கு கோட்டாபயவோ மஹிந்தராஜபக்ஷவோ அரசாங்க பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கமாட்டார்கள். எங்களுக்கு அழைப்பு விடுக்கவுமில்லை. அதற்காக நாங்கள் ஆச்சர்யப்படபோவதுமில்லை. நீங்கள் நினைக்கிறீர்களாக ராஜபக்ஷாக்கள் ஒரு தாம்பாளத்தில் வைத்து எங்களுக்கு இதை ஒப்படைப்பார்கள் என்று. அப்படி ஒப்படைக்க மாட்டார்கள். மே மாதம் 12 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபயவிற்கு ஒரு கடிதத்தை எழுதினோம். இந்த நெருக்கடியை தீர்த்து வைக்க தேசிய மக்கள் சக்தி தயார். எங்களுக்கு அதிகாரத்தை தாருங்கள் என்று. குறைந்தபட்சம் அந்த கடிதம் கிடைத்தது என்றுகூட எங்களுக்கு பதில் கிடைக்கவில்லை. அடுத்ததாக பாராளுமன்றத்தில் நான் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிட்டேன். எங்களுக்கு வாக்களித்திருக்கலாமே. அன்று பாராளுமன்றத்தில் நாங்கள் மூன்று பேர் மாத்திரமே இருந்தோம். எங்களுக்கு சார்பாக பாராளுமன்றத்தில் எவருமே வாக்களிக்கவில்லை. அதற்கான காரணம் என்ன? அவர்கள் ஒருபோதுமே எங்களுக்கு அப்படி அதிகாரத்தை கொடுக்கமாட்டார்கள். ஏன்? அவர்களுக்கு தெரியும் தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுப்பதென்பது ஊழலுக்கும் மோசடிக்குமான முற்றுப்புள்ளியென. அவர்களுக்கு தண்டனை வழங்குவதை நாங்கள் பிரதான காரணமாக கொண்டிருக்கிறோமென்று. எனவே ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய கையாட்களும் தொடர்ச்சியாக நாங்கள் தப்பியோடினோமென கூறிவருகிறார்கள். ஆனால் நாங்கள் அப்படி தப்பியோடியவர்களல்ல. தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த நாங்கள் ஒருபோதுமே பயந்து ஓடுபவர்களல்ல. இந்த சவாலை நாங்கள் ஏற்றுக்கொள்வதும் பயந்தோடுவதற்காக அல்ல. சீரழிந்துள்ள நாட்டை, பொருளாதாரம் சீரழிந்துள்ள விதத்தை, குற்றச் செயல்கள் மலிந்துள்ள விதத்தை, கடனை மீளச்செலுத்த முடியாதுள்ள விதத்தை கண்டு நாங்கள் தப்பியோடத்தான் வேண்டும். ஆனால் நாங்கள் அந்த பொறுப்பினை ஏற்றுக்கொள்ளத் தயார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு நான் கூற விரும்புவது நீங்கள் ரணிலாக நடந்து கொள்வதில் தவறில்லை. ஆனால் ஜனாதிபதி பதவியின் அந்தஸ்த்தினை விளங்கிக்கொண்டு நடக்கவேண்டும். அதைத்தான் கூறுகிறேன். எனவே உங்களுடைய தோ□தல் இயக்கத்தின் பிரதான தொனிப்பொருள் குறைக்கூறலாகும்.






நாச்சியாதீவு பர்வீன்

# நாடறிந்த தமிழ்ப் புலமை, நவீன இலக்கிய ஆளுமை: பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்

இலக்கியவாதிகளை உறுப்பினர்களாகக் கொண்டிருந்த கல்முனைத் தமிழ்ச் சங்கத்தோடு இணைந்திருந்து இலக்கியம் படைத்தவர் . கவிஞர் நீலாவணனை இலக்கிய வழிகாட்டியாகக் கொள்பவர்,

"உன்னிடம் வருகையில்
நான் ஒரு சிறுவன்
கண் விடுக்காத
பூனைக்குட்டி போல்
உலகம் அறியா
ஒரு பாலகனாய்
உன்னிடம் வந்தேன் ".என்று

தன் இலக்கிய வாழ்வின் தொடக்கப்புள்ளியை,நீலாவணன் என்ற இலக்கிய வழிகாட்டியால், தான் புடமிடப்பட்டதை எடுத்துச் சொல்வார் எம்.ஏ.நுஃமான்.

பேராசிரியராக ஆய்வாளராக இன்று பெருமதிப்புப் பெற்றிருக்கும் அவர், கவிஞராக கதைஞராக-படைப்பிலக்கியவாதியாக அறியப்பட்டிருந்தவர் . பேச்சோசைப் பண்பும்,கவித்துவ அழகியலும் கருத்துச் செறிவும் மிக்க நல்ல கவிதைகளின் சொந்தக்காரராகத் திகழ்ந்தவர். அவரை,"1960,1970 களில் நவீன கவிதை வளர்ச்சியில் முன்னிலை வகித்த கவிஞர்களில் முக்கியமானவராக அடையாளப்படுத்துவார்" பேராசிரியர் கா.சிவத்தம்பி.

க.கைலாசபதி,கா.சிவத்தம்பி, எம்.ஏ.நுஃமான் என்று ஆய்வுலகம் வரிசைப் படுத்திப் பார்க்கின்ற விமர்சகர்களில் ஒருவர் அவர்.. முற்போக்கு -மார்க்ஸிய சிந்தனை இலக்கிய ஆய்வாளராக அவரை இலக்கிய உலகம் அடையாளப் படுத்தும். ஆயினும், ஒரு மார்க்சிய விமர்சகன் என்பதைவிட நடுநிலையான விமர்சகன் என்ற அடையாளத்தையே விரும்புபவர் எம்.ஏ. நுஃமான்.

"என்னை மார்க்சிய விமர்சகன் என்பதைவிட, ஒரு நடுநிலையான விமர்சகன் என்ற அடையாளத்தையே நான் பெரிதும் விரும்புவேன். மார்க்சிய விமர்சனத்தில் மேலோங்கி இருந்த வரட்டுப்போக்கை நான் தீவிரமாக விமர்சித்திருக்கிறேன். 'மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்' என்ற எனது நூல் அதன் விளைவுதான். இலக்கியம் பற்றிய விமர்சனப் பார்வைகளும், கொள்கைகளும் பல. அதில் ஒன்றுதான் மார்க்சியப் பார்வை. இலக்கியத்தின் சமூக வேர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்ததில், இலக்கியத்தை ஒரு உன்னத நிகழ்வாக அன்றி ஒரு சமூக உற்பத்தியாக (ளுழஉயைட ிசழனரஉவ) நிறுவியதில் மார்க்சியத்தின் பங்கு முக்கியமானது. ஆயினும் இலக்கியத்தில் எல்லா அம்சங்களையும் அதனால் விளக்கிவிட முடியும் என்று நான் நம்பவில்லை". என்று கூறுவார் அவர்.

படைப்பிலக்கிய வாதியாக இருந்த எம்.ஏ.நுஃமான் பிற்காலத்தில் ஆய்வு ,விமர்சனம் என்பவற்றிலேயே அதிக கரிசனை செலுத்தினார். அவருடைய ஆய்வுத் தேடல்களால் தமிழ் இலக்கிய உலகம் பிரகாசித்த போதும்,ஒரு சிறந்த படைப்பிலக்கிய வாதியை இழந்தே ,ஒரு விமர்சகனை உருவாக்க முடிந்திருப்பதாக நுஃமானின் படைப்பிலக்கியத்தை நேசிப்பவர்கள் வருத்தப்படுவதுண்டு. இந்த வருத்தம் பேராசிரியருக்கும் இருந்ததை அவரின் நேர்காணல்களில் இருந்து அறிய முடியும். எழுத்தாளன் அல்லது படைப்பாளியாக இருப்பதையே அவர் பெரிதும் விரும்பினார்.

"எழுத்தாளன் அல்லது படைப்பாளி என்ற அடையாளத்தையே எல்லாவற்றிலும் முக்கியமானதாக நான் கருதுகின்றேன். கவிஞன், சிறுகதை ஆசிரியன் என்ற வகையில்தான் நான் எழுத்துத்துறைக்கு அறிமுகமானேன். 1960, 70-களில் ஈழத்துக் கவிதைத் துறையில் நானும் குறிப்பிடத்தக்க சில படைப்புகளைச் செய்திருக்கின்றேன் அதிகம் இல்லையென்றாலும் சில சிறுகதைகளை எழுதியிருக்கிறேன். ஆனால் 1980-களில் ஆராய்ச்சி, விமர்சனத் துறைகளில் எனது ஈடுபாடு படைப்பாளி என்ற அடையாளத்தை மெல்ல விழுங்கிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அது எனக்குக் கவலைதரும் ஒரு விடயம்தான்" என்பார் பேராசிரியர் எம். ஏ. நுஃமான்.

எனினும்,ஒருபடைப்பிலக்கிய வாதியாக அவர் தந்திருக்கின்ற கவிதை நூல்கள் நவீன கவிதை,பேச்சோசைப் பண்பு என்பவற்றை எடுத்துக் காட்டுவனவாக இலக்கிய உலகில் தடம் பதித்திருப்பதை திறனாய்வாளர்கள் எடுத்துரைப்பர்.

இலக்கிய வல்லுநராக மதிப்புப் பெற்றிருக்கும் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், கவிதை, ஆய்வு,இலக்கணம், மொழிபெயர்ப்பு,இலக்கிய வரலாறு கலாசாரம் ,என்று பல்வேறு துறைகளில் நூல்களைத் தந்திருக்கின்றார். ஆங்கிலத்திலும் அவரின் மிக முக்கிய நூல்கள் வெளிவந்துள்ளன.

கொழும்பு, 2000 முஸ்லிம் பெண்களும் அரசியல் தலைமைத்துவமும், முஸ்லிம் பெண்கள் ஆய்வு மற்றும் செயல்பாட்டு அமைப்பு, கொழும்பு, 1999 இலக்கியவிமர்சனம் மொழியும் இலக்கியமும் (காலச்சுவடு,2006) திறனாய்வுக் கட்டுரைகள் (அன்னம்,சிவகங்கை 1986) சமூக யதார்த்தமும் இலக்கியப் புனைவும் பாரதியின் மொழிச்சிந்தனைகள்: சௌத் விஷன், சென்னை, 1999 மொழியும் இலக்கியமும் மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும் (அன்னம், சிவகங்கை, 1987) இலக்கணநூல்கள் இருபதாம் நூற்றாண்டு ஈழத் தமிழ் இலக்கியம், இணைப்பதிப்பாசிரியர், 1979 ஆரம்ப இடைநிலை வகுப்புகளில் தமிழ் மொழி கற்பித்தல் இலக்கியவரலாறு இருபதாம் நூற்றாண்டு ஈழத் தமிழ் இலக்கியம், இணைப்பதிப்பாசிரியர், 1979 தொகுப்பாசிரியர் மஹாகவி கவிதைகள், (தொகுப்பாசிரியர்,அன்னம், 1984) மஹாகவியின் வீடும் வெளியும், கல்முனை வாசகர் வட்டம், 1973 மஹாகவியின் கோடை, கல்முனை வாசகர் வட்டம், 1970.

ஆங்கிலம் யு ஊழவெசயளவைந புசயஅஅயச ழக வுயஅடை யனெ ளுைெயடய ழேரகௌசயளந

ளுசை டுயமெயெ ஆரளடமைள - நுவாெைஉ ஐனநவெவைல றவைாை ஊரடவரசயட னுைைநசளவைல

கவிதை மழைநாட்கள் வரும், (அன்னம், சிவகங்கை 1983)

அழியா நிழல்கள், நர்மதா, 1982

தாத்தாமாரும் பேரர்களும் - நெடுங்கவிதைகள், கல்முனை,1977

பதினொரு ஈழத்துக் கவிஞர்கள், க்ரியா, 1984

மொழிபெயர்ப்புக் கவிதைகள்

பாலஸ்தீனக்கவிதைகள், முப்பது கவிஞர்களின் 109 கவிதைகள், அடையாளம், 2008,

மொகமூத் தர்விஸ் கவிதைகள், அடையாளம், 2008

பாலஸ்தீனக்கவிதைகள், 15 கவிஞர்களின் 71 கவிதைகள், மூன்றாவது மனிதன் வெளியீடு, 2000, காற்றில் மிதக்கும் சொற்கள் (மலாய் மொழி கவிதைகள்) இரவின் குரல் (இந்தோனேசிய மொழி கவிதைகள் மொழிபெயர்ப்புக் கட்டுரை நூல்கள் கடப்பாடு அல்லது சுயாதீனம், இசுலாமியப் பெண்கள் பற்றிய சட்டப் பிரச்சினைகள், கொழும்பு, 2004 இனமுரண்பாடு வரலாற்றியலும் ருனெநசளவயனெைபெ ளுசை டுயமெயெ ஆரளடமைஅ ஐனநவெவைல.

மொழியியலாளராக, இலக்கியவாதியாக அவரின் பார்வை வித்தியாசமனது. புதிய கருத்துரு வாக்கங்களைத் இலக்கியப் பரப்புக்குத் தருபவர் அவர்.

மொழிபற்றிய பார்வை அறிவுசார்ந்த தாக இருக்க வேண்டுமென்பதும் உணர்ச்சி சார்ந்தததாக அமையக்கூடாது என்பதும் அவரின் கருத்து. அவ்வாறே,இலக்கியம் என்பது தனித்து தனிமனித அனுபவம் என்பதையோ,சமூகசீர்திருத்தம் கருதியது என்பதையோ,வெறும் புனைவு என்பதையோ ஏற்காதவர் அவர்.

"அனுபவம் மட்டுமே இலக்கியப் படைப்புக்கு உரியது என்னும் போது, அது தனிமனித அனுபவத்தையே பிரதானப்படுத்தி சமூக அனுபவத்தைப் புறக்கணித்துவிடுகின்றது. இங்கு இலக்கியம் சமூகப் பிரச்சனைகளில் இருந்து விடுபட்ட ஒன்றாகிவிடுகின்றது. பதிலாக, சமூகச் சீர்திருத்தத்துக்காகவே படைப்பு என்று கூறும்போது இலக்கியம் மனித வாழ்வின் ஏனைய அம்சங்களை விட்டும் விலகிவிடுகின்றது. மறுபுறத்தில் படைப்பை ஒரு புனைவாக மட்டுமே அணுகுவோர் இலக்கியத்தை ஒரு சொல்வித்தையாகவே மாற்றிவிடுகின்றனர். கோணங்கியின் பிற்கால எழுத்துக்கள் இத்தகைய சொல்வித்தைக்குச் சிறந்த உதாரணம் என்பேன். இலக்கியம் பற்றிய இத்தகைய பிளவுண்ட அணுகுமுறைகளில் எனக்கு உடன்பாடு இல்லை. இலக்கியத்தை வெறும் புனைவாக, சொல்வித்தையாக நான் கருதவில்லை. என்னைப் பொறுத்தவரை தனி மனித அனுபவத்தையும் சமூக அனுபவத்தையும் பிரித்து நோக்க முடியாது. படைப்பாளி சமூக வேர்களை அறுத்துக் கொண்டு புனைவு என்னும் வித்தையுள் புதையுண்டு போகக் கூடாது. ஒரு படைப்பு, வாழ்க்கை பற்றிய - மனித அனுபவத்தின் அர்த்தம் பற்றிய கண்டுபிடிப்பாக, வாழ்க்கைபற்றிய நமது புரிதலை வளப்படுத்துவதாக அமைய வேண்டும். இத்தகைய படைப்புகளே சிறந்த படைப்புகள் என்பேன்" என்று அவர் தெரிவித்துள்ள கருத்துகள் இலக்கியம் பற்றிய விசாலமான பார்வையைத் தருபவை.

ஆறு தசாப்தங்களுக்கு மேலான இலக்கிய அனுபவமும்,எழுத்து, மொழி சார்ந்த ஆழமான அறிவும், ஆற்றலும் நிறைந்துள்ளவர் பேராசிரியர் நுஃமான். இலக்கிய உலகில் சாதனை

(பாவேந்தல் பாலமுனை பாறூக்)

தமிழ் அறிஞர், இலக்கிய வித்தகர், இலக்கண விற்பன்னர்,திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர், கதைஞர், வெளியீட்டாளர் என்று தமிழ் கூறும் நல்லுல கெங்கும் அறியப்பட்டிருப்பவர், கல்வியியலாளர்கள், மாணவர்கள், படைப்பாளர்கள், வாசகர்கள் என்ற பல தரத்தாராலும் மதிக்கப்படுபவர், முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்க அவரின் கவிதை,நெடுங்கவிதை, கட்டுரை,மொழிபெயர்ப்பு என்பவற்றினூடாகவும் , ஆய்வுகளினூடாகவும், அவரோடு நேரடித் தொடர்பு இல்லாதோராலும் இலக்கிய வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பவர்,

தனது மொழிபெயர்ப்புக் கவிதைகளினூடாக உலகப் புரட்சிகரக் கவிதைகளையும் ,கவிஞர்களையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தி வந்திருப்பவர்,

மொழிபெயர்ப்புக் கவிதைகளை வெறும் மொழிபெயர்ப்பாகவன்றி ,மூலக் கவிதைகளின் கவித்துவம் சிதைவு படாதவாறு வழங்கியதன் மூலம் கவிதை வாசகர்களைப் பெரிதும் ஈர்த்திருப்பவர்,

வெளியீட்டுத் துறையிலும் புதிய வரலாறு படைத்திருப்பவர்.கவிஞன் என்ற சஞ்சிகை வெளியீட்டால் நவீன இலக்கிய சிந்தனையை விதைத்திருப்பவர்,முன்னோடிக் கவிஞர்களின் (மஹாகவி போன்ற)நூல்களை வெளியிட்டு, அவர்களின் இலக்கிய அந்தஸ்தை இனம்காட்டி வருபவர்,

கவிதை, கவியரங்கு தொடர்பாக புதிய திருப்பங்களை (கவிதையை பேச்சோசைப் பண்புக்கு மாற்றுவதிலும், கவியரங்குக்குப் பதிலாக கவிதா நிகழ்வு) ஏற்படுத்துவதில் முன்நிற்பவர் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்.

இலங்கையில் கலை இலக்கியத் துறையில் தனித்துவ முத்திரை பதித்திருக்கும் கல்முனைப் பிரதேசத்தில் பிறந்தவர் அவர். தமிழ் கலை இலக்கிய முயற்சியில் நீலாவணன் தலைமையில் 1960 களில் இயங்கிய, மருதூர்க் கொத்தன், பாண்டியூரன், மு.சடாட்சரன், மருதூர்க்கனி ,சண்முகம் சிவலிங்கம் போன்ற

# அமானா வங்கிக்கு Euromoney உயர் கௌரவம்






நாட்டில் காணப்படும் வட்டி-சாராத வங்கிச் சேவைகளுக்கான முன்னோடியாகத் திகழும் அமானா வங்கிக்கு, இலங்கையின் சிறந்த இஸ்லாமிய வங்கிக்கான கௌரவம் பெருமைக்குரிய நுரசழஅழநெல இஸ்லாமிய நிதியியல் விருதுகள் வழங்கலில் வழங்கப்பட்டிருந்தது. Euromoney இனால் வெளிப்படுத்தப்பட்டதற்கமைய, இந்த கௌரவிப்பினூடாக அமானா வங்கியின் வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் மக்களுக்கு நட்பான வங்கியியலுக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பு ஆகியன வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

Euromoney இஸ்லாமிய நிதியியல் விருதுகள் என்பது, நுரசழஅழநெல இன் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விருதுக் கட்டமைப்பின் அங்கமாக அமைந்திருப்பதுடன், முன்னைய 12 மாத காலப் பகுதியில் சிறந்த வினைத்திறனை காண்பித்திருந்த வட்டி-சாராத நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையிலும், தமது சந்தைகளில் அந்நிறுவனங்கள் எய்தியிருந்த தாக்கங்களை கௌரவிக்கும் வகையிலும் அமைந்திருந்ததுடன், சந்தையில் வட்டி-சாராத வங்கியியல் மற்றும் நிதியியல் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கியிருந்தமையை கௌரவிப்பதாகவும் அமைந்திருந்தது. Euromoney இன் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆய்வு அணியினரால் இந்த விருதுகளுக்கு மத்தியஸ்தம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2023 ஆம் ஆண்டில், அமானா வங்கி சிறந்த நிதிப் பெறுபேறுகளை எய்தியிருந்தது. குறிப்பாக வரிக்கு பிந்திய இலாபம் 76மூ வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 1.4 பில்லியனை எய்தியிருந்ததுடன், மூலதன இருப்பு ரூ. 20 பில்லியனாக உயர்ந்திருந்தது. புதிய முதலீட்டுடன், வங்கி துரித வளர்ச்சிக்கு முகங்கொடுத்திருந்ததுடன், காணப்படும் வாய்ப்புகளை கையகப்படுத்தும் நிலைக்கு உயர்ந்துள்ளது.

விருது தொடர்பில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "வட்டி-சாராத வங்கியியல் முறைமையில் அமானா வங்கியின் தலைமைத்துவத்தை மீண்டும் உறுதி செய்து, சர்வதேச கௌரவிப்பை பெற்றுக் கொள்வதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்க மக்களுக்கு நட்பான வங்கிச் சேவைகளை ஊக்குவிப்பதில் நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாகவும், எமது வாடிக்கையாளர்களின் வளர்ச்சிக்கு வலுவூட்டி, வளமூட்டுவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பை உறுதி செய்வதாகவும் இந்த விருது அமைந்துள்ளது." என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. ஐளனுடீ குரூப் 'யுயுயு' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது. அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான முசிாயஐெயசந நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

# தொழில் வழிகாட்டல் பயிற்சி நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைப்பு!



(எம் எப்.நவாஸ்)

*கல்வி அமைச்சின் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவினால் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இவ்வருடம் க.பொ.த (உயர் தர) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட 03 மாதகால VISTA தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 132 மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.*

*இந்நிகழ்வானது அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் திறன்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், க. ஜீவகுமார் தலைமையில் புசயனெ ஆழளஙரந கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் இர்பான் விசேட அதிதியாகவும் அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் A.M.ரகுமதுல்லா மற்றும் சிறப்பு அதிதிகளாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.*

# ஆய்வுகளின்படி நாமே முன்னிலை
# மக்களின் யுகத்தை அமைப்போம்



## பண்டாரகம கூட்டத்தில் சஜித் சூளுரை





முதலாம் பக்கத் தொடர்ச்சி...

தொழில்நுட்பத்துடன் அனைத்து துறைகளையும் முன்னேற்றம் அடைய செய்து, புதிய தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கி, உற்பத்தியின் கொள்ளளவை அதிகரிக்கச் செய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டாவது வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் களுத்துறை பண்டாரகம நகரில் (17) இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றுகயில் மேலும் தெரிவித்ததாவது,

நாடொன்றை கட்டியெழுப்புவதற்கு தெளிவான வேலைத் திட்டங்கள் இருக்க வேண்டும். அரசாங்கம் ஒன்றுக்குள் மேல்மட்டத்திலிருந்து கீழ் மட்டத்திற்கு கருத்துக்கள் பரிமாறப்பட வேண்டும். கீழ் மட்டத்திலிருந்து மேல்மட்டத்திற்கு கருத்துக்கள் பரிமாறப்பட வேண்டும். இருந்தாலும் 24 மணித்தியாலமும், ஏழு நாட்களும், 365 நாட்களும், திருட்டை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள் கீழிருந்து மேல் வரை செல்கின்றது. ஊழலும் மோசடிகளும் திருட்டுத்தனமும் நாட்டில் காணப்படுகின்றன. விசா, புதுப்பிக்கத்தக்க சக்தி, எண்ணை கொடுக்கல் வாங்கல் ஆகிய கொடுக்கல் வாங்கல்களின் ஊடாக திருடப்பட்ட பணத்தை அவர்களின் வயிற்றை நிரப்புகின்ற அரசியலை செய்வதற்காக பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

இன்று பல தரப்பினர் ஒன்றிணைந்துள்ளனர்,அதில் வைன் ஸ்டோர்ஸ், மதுபான அனுமதிப்பத்திரம் போன்ற வரப்பிரசாதங்களுக்கு அவர்களை பலியெடுத்துள்ளனர். தான் ஜனாதிபதியான பின்னர் அவ்வாறு மோசடியாகவும் இலஞ்சமாகவும் வழங்கப்பட்ட அனைத்து அனுமதி பத்திரங்களையும் இரத்து செய்வேன். அரசியல் இலஞ்சத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சட்டத்தின் முன் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான தவறுகளை செய்யாமல் சிந்தித்து செயல்படுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

எவரேனும் ஒருவர் கொள்கை திட்டத்துடனும் வழிகாட்டல்களுடனும் அரசியல் பயணங்களை முன்னெடுக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியுடனும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்புடனும் இணைந்து கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் பணத்துக்காகவும் ஊழலுக்காகவும் மோசடி களுக்காகவும் இணையவில்லை. சிறந்த கொள்கை திட்டத்துடன் இணைந்து கொண்டிருக்கின்றனர. இந்த ஊழல் மிக்க திருட்டுத்தனமான அரசியலை நிறுத்துவதற்கான இடவேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தனி மனிதன் திருந்தாமல் நாட்டை திருத்த முடியாது என்று பஞயாசிக தேரர் குறிப்பிட்டாலும், இன்று நாட்டில் ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சியாளர்களும் அவர்களின் சகாக்கள் கூட்டமும் ஒன்றாக இணைந்து கொண்டு சுகபோக வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக செயல்படுகிறார்கள். 220 இலட்சம் மக்களின் முன்னேற்றமே ஐக்கிய மக்கள் சக்தி அபிவிருத்தி என்பதாக காண்கின்றது. அபிவிருத்தி என்று தொகைகளை காண்பித்து பயனில்லை. அபிவிருத்தியை ஒவ்வொரு குடிமகனும் உணர வேண்டும். அதன் பிரதி பலனை அனுபவிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன்று சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தில் உள்ளவர்கள் மாத்திரமே அனுபவிக்கின்றனர். ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மாத்திரமே அனைத்து சுகபோகங்களை அனுபவிக்கின்றனர். 220 இலட்சம் மக்களும் அனாதைகளாக கைவிடப்பட்டிருக்கின்றனர். தேர்தல் காலங்களில் பொய் வாக்குறுதிகளை வழங்கி இந்த முறையும் மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இதன் பின்னரும் மக்கள் ஏமாறுவதற்கு தயாராக இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த நாட்டில் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். பொருளாதார வீழ்ச்சி பொருளாதாரக் கொலைகள் ஊடாக நாட்டை சீரழித்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் நாட்டை கட்டியெழுப்புவதற்கும் அபிவிருத்தியின் தளிர்களை பெற்றுத் தருவதற்கும் தாம் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது மேலும் குறிப்பிட்டார்.

அதேபோன்று நாட்டை மேலும் வலுப்படுத்துவதற்காக தாம் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறேன்.



எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு "பிரபஞ்சம்" "மூச்சு" திட்டங்கள் ஆகியவற்றின் ஊடாக மக்களுக்கு சேவை செய்ததைப் போன்று, ஆட்சியைப் பெற்றுக் கொண்ட பின்னரும் மக்களுக்காக சேவை செய்வேன். இவை அனைத்தும் அரசாங்க பணத்தில் இருந்து செய்யப்படவில்லை. நன்கொடைகள், உதவிகள் என்பனவற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. இந்த நாட்டை கட்டி எழுப்புவதென்றால் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் அவசியம். பிரபஞ்சம், மூச்சு போன்ற வேலை திட்டங்களின் ஊடாக ஊழல் மோசடி திருட்டு என்பன இடம் பெறவில்லை என்பதால் பெருந்தொகையானவர்கள் இதற்கு உதவிகளை வழங்க தயாராக இருந்தனர் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

- ஏனையவர்கள் சொல்வதில் நம்பிக்கை கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை, என்னை நம்பலாம்.

அரகல போராட்டத்தின் பின்னர் அரசியல்வாதிகளின் மீது மக்கள் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். ஆனாலும், எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி மக்களுக்கு பாரிய சேவைகளை செய்திருக்கிறது. மத்திய வங்கியை சுயாதீன கட்டமைப்பாக மாற்றுவதற்கு இலஞ்ச ஊழல் சட்டமூலத்தை விட புதிய சட்டமூலம் ஒன்றை கொண்டுவந்தேன். ஊழலை தடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி பாரிய வேலை திட்டங்களை முன்னெடுத்து இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.



## மனநலமும் ஆலோசனையும் 44

# சவால்கள் பொன்னான படிகள்

வளமான மண்ணில் இரண்டு விதைகள் அருகருகே கிடந்தன.

முதல் விதை சொன்னது, "நான் வளர விரும்புகிறேன் !

நான் வேர்களை தரையில் ஆழமாக இறக்கி தரையில் இருந்து முளைக்க ஆசைப்படுகிறேன். மென்மையான மொட்டுகளாக மலர்ந்து, வசந்தகாலம் வருவதை மக்களுக்கு அறிவிக்க கனவு காண்கிறேன். நான் சூரியனின் சூடான கதிர்களை உணர விரும்புகிறேன். என் இதழ்களில் பனித்துளிகள் ஒட்டிக் கொள்வதை காண விரும்புகிறேன்!".

விரும்பியது போன்று இந்த விதை வளர்ந்து அழகான பூவாக மாறியது.

இரண்டாவது விதை சொன்னது: "நான் பயப்படுகிறேன். என்னால் வளர முடியாது. நான் என் வேர்களை தரையில் பதித்தால், அவைகள் அங்கு என்னவெல்லாம் சங்கடங்களை சந்திக்கும் என்று எனக்குத் தெரியாது. நான் மென்மையான தண்டுகளாக வளர்த்தால், அவை காற்றினால் காயப்படுத்தப்படலாம். பூக்களாக மலர முடியாமல் போகலாம். எனவே எனக்கு இப்போது முடியாது. பாதுகாப்பான நேரம் வரும்வரை நான் காத்திருப்பேன்.

இப்படிச் சொல்லி இரண்டாவது விதை முலைக்காமல் காத்திருந்தது. ஒருநாள் அதைக் கடந்து சென்ற ஒரு கோழி அதை அப்படியே கொத்தி விழுங்கி விட்டது.

இப்படி நம்மிலும் சிலர் கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி பயனும் பெறுமதியும் நிறைந்தவர்களாக மாற்றிக்கொள்ள பின்வாங்குகிறார்கள். நம்பினால், முயற்சித்தால் எதுவும் சாத்தியம் என்பதை மறந்து விடுகிறார்கள்.

புழுக்களையும் பூச்சிகளையும் எதிர்கொண்டு பூவிதை முளைக்கிறது

காற்றுக்கும் கடும் மழைக்கும் தாக்குப்பிடித்து செடியாகி, மொட்டாகி பூவாகிறது. மலர்ந்து மனம் வீசுகிறது. சவால்கள் வாழ்க்கை பயணத்தின் பொன்னான படிகள் என்பதை உணர்த்துகிறது

இன்று நம்மில் சிலர் இல்லை என்றும் ஏலாது என்றும் முடியாது என்றும் கிடைத்திருக்கும் வாய்ப்புகளை தள்ளிப்போடுவதை காண்கிறோம். தடைகளை கடக்க தவறினால்....

சோம்பலை வெல்ல மறந்தால்.... கண்ணியமாகவும் வலுவாகவும் இருக்க ஆசைப்படாவிட்டால்...

பொறுப்புள்ள நபராக மாற விரும்பாவிட்டால்.....

புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளா விட்டால்

புதிய திறன்களை வளர்த்துக் கொள்ள முன்வறாதிருந்தால்....

எங்கள் மனநிலையை மாற்றி, முன்செல்ல முனையாவிட்டால்.....

வளமான மண் கிடைத்தும் வளர்ந்து வளம்பெற சோம்பல் கொண்டதால்

கோழி விழுங்கிய விதையை போல் நாமும் ஆகிவிடலாம்.

வாழ்க்கை பாதையில் சில சமயங்களில், நாங்கள் சங்கடமான, சவாலான விடயங்களை சந்திக்க வேண்டிவரும். ஆனால் நாங்கள் எங்கள் சொந்த நலனுக்காக அவை அனைத்தையும் எதிர்கொள்ளத்தான் வேண்டும். சங்கடங்களை சந்திக்காமல் வெற்றி அடையலாம் என்று நினைக்கலாகாது.

தனிப்பட்ட வளர்ச்சி என்பது சிறு வயதிலிருந்தே தொடங்கும் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும்.

பூத்து காய்க்கும் வரை பல அத்தியாயங்கள் கடக்கும் விதையை போல..

வெற்றியை அடைய நாமும் பல அர்ப்பணங்களை செய்ய வேண்டும். சங்கடங்களை தைரியமாக சந்திக்க வேண்டும்.

நம்பிக்கை உறுதியுடைய உரமாக இருப்பது சவால்களும் சங்கடங்களும் அவற்றுக்கு முகம் கொடுப்பதும் ஆகும் என்பதை புரிய வேண்டும்.





அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---

## மங்கையொளி

பயாஸா பாஸில்

# பெண்களின் ரகசியங்கள்

1. கோபம் மற்றும் வார்த்தைகள்:

ஒரு பெண் கோபமாக இருக்கும்போது, அவள் பேசுவதில் பெரிதாக பொருள் ஏதும் இருக்காது. அவளை அமைதிப்படுத்த எப்போதும் அவளை அணைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். உடனடியாக அமைதி ஆகி விடுவாள்.

2. பிரிவின் மனவேதனை:

ஒரு பெண் உண்மையாகக் காதலிக்கும் மனிதனிடம் இருந்து பிரிந்து இருக்கும் நேரம், அவளது மிகக் கடினமான நேரம். அவள் மனவேதனை அத்தகைய நேரத்தில் உச்சத்தில் இருக்கும். அவளுக்கு ஆறுதலாக இருக்க முயற்சி செய்யுங்கள்.

3. நம்பிக்கை:

ஒரு பெண் ஒரு மனிதனை நம்ப நேரம் பிடிக்கும், அவள் நம்பினால் அவளது மனதை மாற்றுவது கடினம். அந்த நம்பிக்கையை உடைக்கும் வண்ணம் நீங்கள் தவறு செய்தால், நீங்கள் அவளை மொத்தமாக மறந்து விடுவது நல்லது.

4. நிறைவு இல்லாத பல்கலைக்கழகம்:

ஒரு பெண் எப்போதும் பட்டம் பெற முடியாத, காலம் முழுவதும் படித்துக்கொண்டே இருக்க வேண்டிய ஒரு பல்கலைக்கழகம்.

5. திருமணச் சான்றிதழ்:

உங்கள் திருமணச் சான்றிதழ் ஒரு "ஓட்டுநர் உரிமம்" (டிரைவிங் லைசென்ஸ்) அல்ல, இது ஒரு "கற்றல் அனுமதி" (Learning license) மட்டுமே. அவளை தொடர்ந்து வசீகரிக்க செய்ய வேண்டியவைகளை செய்து கொண்டே இருங்கள்.

6. நடத்தை:

அவள் இப்போது மிகவும் கசப்பான ராட்சசியாக இருக்கலாம், ஆனால் உங்கள் அணுகுமுறையின் மூலமாக அவளை இனிய தேவதையாக மாற்ற முடியும்.

7. நினைவுகள்:

ஒரு பெண் கிட்டத்தட்ட எல்லாவற்றையும் நினைவில் வைத்திருப்பாள், முக்கியமாக காயப்படுத்தியதை கண்டிப்பாக நினைவில் வைத்திருப்பாள். அவளை காயப்படுத்துவதைத் தவிர்க்கவும், நீங்கள் அவளை முழுமையாக நம்பவதை உறுதிப்படுத்திக் கொண்டே இருக்கவும்.

8. ரகசியம்:

ஒரு பெண் மிகவும் ரகசியமாக இருக்கக் கூடியவள், ரகசியமாக இருக்க விரும்புவவள். பெரும்பாலும் அவர்கள் தனக்கு பிடித்த ஆண்களிடம் கடினமாக நடக்கும் போது, அவர்கள் தங்களது நெருங்கிய நண்பர்களிடம் சென்று அழுவார்கள். உங்கள் பெண்ணை உங்கள் மிகச் சிறந்த நெருங்கிய நண்பனாக்குங்கள்.

9. வாழ்த்துதல்:

அனைத்து பெண்களும் தன்னிடம் யாசிப்பதை / தன்னை வாழ்த்துவதை விரும்புபவள். ஆண்கள் இதை பயன்படுத்தத் தவறவிடுகிறார்கள். பெண்களை குழந்தை போல நடத்துங்கள், அவர்களுக்கும் அதுதான் தேவைப்படுகிறது.

10. உணர்வு:

பெண்கள் உப்பு போன்ற தனித்துவமான குணம் கொண்டவர்கள், அவர்கள் இருக்கும்போது அதை உணர முடியாது, ஆனால் அவர்கள் இல்லாத நேரத்தில் அனைத்தும் சுவையற்றதாக ஆகி அவர்களின் தேவையை ஆணுக்கு உணர்த்திவிடும்.

11. காதல்:

அவள் உங்களை உண்மையாகக் காதலித்தால், உங்களை மகிழ்ச்சியாக வைக்கும் எல்லாவற்றையும் பார்த்து பார்த்து செய்ய முடியும், ஆகவே அவளாக செய்யும் வரை பொறுமை காக்கவும், அவளைக் கட்டாயப்படுத்த வேண்டாம்.

12. பாதுகாப்பு:

நீங்கள் அவளை பராமரிக்கவில்லை என்றால், அதைச் செய்ய ஒருவரை சுலபமாக பெண்களால் கண்டுபிடிக்க முடியும். அதுபோன்று எப்போதும் பலர் காத்துக் கொண்டிருக்க, அதில் அவள் உங்களை தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை எப்போதும் மறக்க வேண்டாம்.

13. பணம்:

ஒரு பெண் உங்களை உண்மையாகக் காதலித்தால், உங்களிடமிருந்து பணம் கேட்கவே வெட்கப்படுவாள். ஆனால் ஒரு நாகரீகமான மனிதனாக அப்படி அவள் கேட்காமல் நீங்களாகவே தேவையானதைக் கொடுத்து விடுங்கள். உங்களை காதலிக்கும் ஒருத்தி கண்டிப்பாக உங்கள் பணத்தை தேவையற்ற விஷயங்களுக்கு செலவழிக்க மாட்டாள்.

உங்கள் வாழ்க்கையில் நல்ல பெண் இருந்தால், அவளை எப்போதும் இகழ்ந்து விட வேண்டாம். அவர்கள் விலைமதிப்பற்ற வைரங்கள். அவர்களை காயப்படுத்தாதீர்கள், ஏனெனில் அந்த வைரங்களைக் கவர பலர் எப்போதும் தயாராகக் காத்து இருக்கிறார்கள்.

ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்குப் பின்னாலும், அவனை உடலாலும் உள்ளத்தாலும் உயிராலும் காதலிக்கும் ஒரு நல்ல நேர்மையான பெண் கண்டிப்பாக இருக்கிறார்.

# அழகிய ஆண் மகன்

1. எந்த ஒரு கடும் கோபத்திலும் எல்லை மீறி தகாத வார்த்தைச் சொல்லிவிட்டு வாய் தவறி வந்தது என்றுச் சொல்லாதவர்.

2. உங்களின் மோசமானச் சமையலையும் சிரித்துக் கொண்டும் சகித்துக் கொண்டும் சாப்பிடுவார்.

3. எந்த ஒரு சண்டையிலும் உங்கள் குடும்பத்தாரை இழுத்துப் பேசாதவர். ஒவ்வொரு சண்டையின் பின்னும் உங்களை இன்னும் ஆழமாய் நேசிப்பவர்.

4. மற்றவர் முன் உங்களை விட்டுத் தர மாட்டார். உங்கள் குறைகளை நிறைகளாக்க முயற்சிப்பார்.

5. உங்கள் மனதை ஆழமாய் நேசிப்பதால், எத்தனை அழகான பெண்கள் முன்னும் நீங்கள் மட்டுமே அவர் கண்ணுக்கு அழகாய் தெரிவீர்கள்.

6. உங்கள் முகம் சிரிப்பிழந்த நாட்களில், அவரால் அலுவலகத்தில் வேலை செய்ய முடியாது. வேறு எந்த வேலையிலும் கவனம் செல்லாது.

7. உங்களை எந்த ஒரு பெண்ணுடனும் ஒப்பிட்டுப் பேச மாட்டார். எந்த ஒரு பெண்ணைப் பற்றியும் உங்களிடம் பேசவும் மாட்டார்.

8. உங்களை தொலைவில் இருந்துப் பார்த்தேனும் ரசிக்க தவமிருப்பார். உங்கள் மௌனங்கள் அனைத்தையும் அழகாய் மொழி பெயர்ப்பார்.

9. அவர் குடும்பத்தில் அனைவருக்கும் பிடித்த பெண்ணாய் உங்களை மாற்றிடுவார். எல்லாருக்கும் ஏற்றார் போல் நீங்கள் நடந்துக் கொள்ள உதவுவார்.

உங்களை வேலைக்காரியாய், சமையல்காரியாய் பார்ப்பதை விட்டு, குழந்தையாய், தோழியாய், தாரமாய், தாயாய் பார்ப்பார்.

ஆத்திரத்தில் திட்டிவிட்டு, உங்கள் அழுகை பார்த்து அதிகம் வருந்துவார். நீங்கள் சிரிக்கும் வரை அவர் சிந்தனை இழந்து நிற்பார்.

வாழ்க்கையில் இப்படி ஒரு ஆண் கிடைத்தால் அவனை நிச்சயம் இழந்து விடாதீர்கள்

அழகான வாழ்க்கை என்பது ஆடம்பரத்தை சார்ந்தது அல்ல, அன்பையும் அமைதியையும் சார்ந்தது..

நீங்கள் அமைதி பெற உங்களிலிருந்தே துணைவியரை உங்களுக்காகப் படைத்து உங்களுக்கிடையே அன்பையும், இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பது அவனது சான்றுகளில் ஒன்றாகும். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன.

(அல்குர்ஆன் 30:21)




# ஐரோப்பிய சூப்பர் கிண்ணம் சம்பியனானது ரியல்மெட்ரிட்

ஐரோப்பிய சூப்பர் கிண்ண கால்பந்துப் போட்டியில் ரியல்மெட்ரிட் அணி அட்லாண்டா அணக்கு எதிரான இறுதிப் போட்டியில் 2:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கியது. வார்சாவில் நடைபெற்ற ஐரோப்பிய சூப்பர் கிண்ண இறுதிப் போட்டியில் ரியல்மெட்ரிட் அணியினர் அட்லாண்டா அணியை சந்தித்து விளையாடினர். இப்போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் பந்து இரு அணிகளின் கோல் கம்பங்களுக்கும் சென்று வந்தது. இருப்பினும் இரு அணி வீரர்களாலும் முதல் கோலினை உட்செலுத்த முடியாமல் போக முதல் பாதி கோலின்றி சமநிலை பெற்றது. பின்னர் ஆரம்பித்த தீர்மானமிக்க 2ஆவது பாதி ஆட்டத்தில் ரியல்மெட்ரிக் அணியின் ஆதிக்கம் அதிகரிக்க போட்டியின் 59ஆவது நிமிடத்தில் ஜ/னியர் கொடுத்த பந்துக் கடத்தலை பெற்றுக் கொண்ட பெடோரிக்கோ வல்வெர்டோ கோலாக மாற்ற 1:0 என முன்னிலை பெற்றது ரியல்மெட்ரிட். பின்னர் தொடர்ந்த ஆட்டத்தின் 68ஆவது நிமிடத்தில் பெல்லிங்கம் வழங்கிய பந்துக் கடத்தலினை பெற்றுக் கொண்ட கிலியான் எம்பாப்பே ரியல்மெட்ரிட் அணிக்கான முதல் கோலை உள்ளனுப்பியதுடன் அணியின் சார்பான 2ஆவது கோலகவும் மாற்றமடைய மிகுதி நேரத்தில் அட்லாண்டா அணியால் கோல்கணக்கை ஆரம்பிக்க முடியாமல் போக 2:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றரியல் மெட்ரிட் அணி சம்பியன் மகுடத்தை வெற்றி கொண்டு அசத்தியது.

# திக்வெல்லவிற்கு தடை விதித்தது இலங்கை கிரிக்கெட்

இலங்கை கிரிக்கெட் வீரர் நிரோஷன் திக்வெல்ல ஊக்கமருந்து தடுப்பு சட்டத்தை மீறியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. 2024 லங்கா பிரீமியர் லீக் (LPL) போட்டித் தொடரின் போது நடத்தப்பட்ட ஊக்கமருந்து சோதனையில் இது தெரியவந்துள்ளது. இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால் (SLADA) இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, மறு அறிவித்தல் வரை அனைத்து வகையான கிரிக்கெட்



போட்டிகளிலும் அவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# முன்சிப் தலைமையிலான இலங்கை அணி இன்று நேபாள அணியை எதிர்கொள்கின்றது




தெற்காசிய உதைப்பந்தாட்ட சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள 20 வயதுக்குற்பட்டவர்களுக்கான உதைப்பந்தாட்டத் தொடரில் மொய்டீன் முஹம்மது முன்சிப் தலைமையிலான இலங்கை அணி இன்றைய தினம் நேபாள அணியை எதிர்கொள்கின்றது. இவ் உதைப்பந்தாட்டத் தொடரில் மொத்தம் 7 அணிகள் பங்கேற்றிருக்க இவ் 7 அணிகளும் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டி அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய குழு ஏ இல் போட்டிகளை நடாத்தும் நேபாளம், இலங்கை , பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் அணிகளும், குழு பீ இல் இந்தியா, பூட்டான் மற்றும் மாலைதீவு ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் குழு ஏ இல் இடம்பெற்ற பாகிஸ்தான் இத் தொடரிலிருந்து விலகிக் கொள்ள குழு ஏ இல் உள்ள மிகுதி 3 அணிகளும் குழு நிலை போட்டிகளில் பங்கேற்கின்றன.
இந்நிலையில் இத் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை அணி கடந்த வெள்ளிக்கிழமை (16) இரவு நேபாளம் நோக்கி பயணமானது. 23 வீரர்கள் உள்ளடக்கப்பட்ட இலங்கை அணிக்கு தலைவரான ஏறாவூர் இளம் தாரகை அணியின் நம்பிக்கை நட்சத்திரமும், ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை அணியின் முன்கள வீரருமான மொய்டீன் முஹம்மது முன்சிப் பொறுப்பேற்றுள்ளார். அவரோடு ஏறாவூர் மண்ணை பிரதிநிதித்துவம் செய்கின்ற 5 வீரர்கள் இலங்கை 20 வயதுக்குட்பட்ட தேசிய அணியில் உள்வாங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.
அதற்கமைய இத் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி நேற்று (18) நேபாள அணியை எதிர்த்தாடுகின்றது. இப்போட்டி இலங்கை நேரப்படி பிற்பகல் 3.45 மணிக்கு டஸ்ரத் ரங்கசாலா மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு அணித்தலைவர் முன்சிப்பின் பங்கு மிகப் பெரியதாக இருக்கும் என நம்பலாம்.
மேலும் இத் தொடரில் இலங்கை அணி தமது 2ஆவது போட்டியில் நாளை மறுதினம் (20) பங்களாதேஷ் அணியை அதே மைதானத்தில் எதிர்த்தாடள்ளது. குறிப்பாக இலங்கை 20 வயதுக்குட்பட்ட அணியின் பயிற்று விப்பாளர்களாக தேவசகாயம் ராஜமணி மற்றும் அகஸ்டின் ஜோர்ஜ் ஆகியோர் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கம்பஹா – களனி வலய தமிழ் மொழி பாடசாலை புட்போல் சம்பியனாக கஹட்டோவிட்ட அல்பத்ரியா மகா வித்தியாலயம்




கம்பஹா – களனி வலய தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கிடையில் முதன் முறையாக நடத்தப்பட்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கஹட்டோவிட்ட அல்பத்ரியா மகா வித்தியாலயம் சம்பியனானது.
கம்பஹா – களனி வலய தமிழ் மொழி மூல பாடசாலைகள் மேல் மாகாணத்தில் காணப்படுகின்ற மிகவும் சிறந்த கால்பந்து அணிகளை கொண்டவையாக காணப்படுகின்ற நிலையில், இவற்றுக்கிடையில் கால்பந்து சுற்றுப் போட்டியொன்றை நடத்துவதற்கு கம்பஹா – களனி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ரீ.எம். தௌசீர் அவர்கள் வழிகாட்டல் வழங்கியிருந்தார்.
இந்த கம்பஹா களனி வலயக்கல்வி பாடசாலைகளும் 8 பாடசாலைகளுக்கி டையிலான இந்த சுற்றுப் போட்டியினை மள்வானை அல்-முபாரக் தேசிய பாடசாலை காற்பந்து ஒன்றியம், 'எக்ஸ் மொபைல்' அனுசரணையுடன் ஏற்பாடு செய்திருந்தது. மள்வானை அல்முபாரக் மத்தியக் கல்லூரி, திஹாரி அல் அஸ்கர் மத்திய கல்லூரி மாபொல அல் அஷ்ரப் மகா வித்தியாலயம், கஹட்டோவிட்ட அல்பத்ரியா ம.வி., உலஹிட்டியவல அல்மஹ்மூத், யட்டிஹேன அல்முஸ்தபா, உடுகொட அரபா, பூகொட குமாரிமுல்ல மகா வித்தியாலய 17 வயதிற்கு கீழ்பட்ட வயதுகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் அல்பத்ரியா மகா வித்தியாலயம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.
இறுதி போட்டியில் திஹாரி அல் அஸ்கர் கல்லூரியுடன் மோதி 3-0 கோல்கள் வித்தியாசத்தில் பத்ரியா அணி சம்பியனானது. கம்பஹா களனி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தௌசீர் வழிகாட்டலின் கீழ் நடந்த போட்டிகள் பிரதேச மாணவர்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் வலுப்படுத்துவதையும் இம்மாணவர்களின் திறமைகளை அறிந்துகொள்ளவும் கால்பந்தாட்டத்திற்கான ஆர்வத்தினை அதிகரிக்கச் செய்தலையும் கம்பஹா களனி வலயத்தைச் சேர்ந்த சிறந்த கால்பந்து அணியை உருவாக்குதலையும் அல் முபாரக் தேசிய பாடசாலையை இப்பிரதேசத்தில் மேலும் பிரபல்யப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு ஏற்பாடு சொய்யப்பட்டிருந்தது.

# பயிற்சி போட்டியில் இலங்கை அணி தோல்வி

இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான 4 நாட்கள் கொண்ட பயிற்சி டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸின் மோசமான துடுப்பாட்டத்தின் விளைவாக 7 விக்கெட்டுக்களால் தோற்றுப் போனது தனஞ்சய டி சில்வா தலைமையிலான இலங்கை அணி.
இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது இலங்கை அணி. இத் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் இங்கிலாந்தின் லயன்ஸ் அணிக்கு எதிரான 4 நாட்கள் கொண்ட பயிற்சி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி பங்கேற்றது.
இப் போட்டி கடந்த புதன்கிழமை (14) வேர்செஸ்டரில் உள்ள கண்ரி மைதானத்தில் ஆரம்பித்திருந்தது.
இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து லயன்ஸ் அணி முதலில் இலங்கை அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது.
இதற்கமைய முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பாடக் களம் நுழைந்த இலங்கை அணிக்கு அனுபவமிக்க வீரர்கள் யாருமே கைகொடுக்கத் தவறினர். இதனால் இலங்கை அணி தமது முதல் இன்னிங்ஸில் 43.5 ஓவர்களுக்கு முகம் கொடுத்து சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 139 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் திமுத் கருணாரத்ன 26 ஓட்டங்களையும், பிரபாத் ஜெயசூரிய 20 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் சமான் அக்டர் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.
பின்னர் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு ஹம்ஸா ஷைக் 91 ஓட்டங்களையும், கசி அல்ரிச் 78 ஓட்டங்களையும் பென் மெக்கினி 46 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுக்க 324 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.
பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 5 விக்கெட்டுக்களையும் கசுன் ராஜித 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.
பின்னர் 184 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் பின்னிலையுடன் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு ஆரம்ப விக்கெட் ஜோடியான நிஷான் மதுஷ்க மற்றும் திமுத் கருணாரத்ன ஆகியோர் 105 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். பொறுப்புடன் ஆடிய திமுத் 43 ஓட்டங்களையும், நிஷான் மதுஷ்க 77 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். அடுத்து வந்த குசல் மெண்டிஸ் 3 ஓட்டங்களுடன் ஏமாற்றம் கொடுத்தார்.
பின்னர் வந்த அஞ்சலோ மெத்யூஸ் 51ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 66 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க இலங்கை அணி 300 ஓட்டங்களைக் கடந்தது. அனுபவ வீரரான தினேஷ் சந்திமால் ஓட்டமின்றி ரன்அவுட் ஆக சதீர சமரவிக்ரம 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள இலங்கை அணி 87.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 306 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் பர்ஹான் அஹமட் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.
பின்னர் 122 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து லயன்ஸ் அணி 3ஆம் நாள் நிறைவில் 47 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.
பின்னர் 4ஆவதும் இறுதியுமான நாளில் தமது 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து லயன்ஸ் அணி மேலதீகமாக ஒரு விக்கெட்டினை இழந்து 26.5 ஓவர்களில் 122 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் ரொப் யடெஸ் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தனஞ்சய டி சில்வா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.
மேலும் இலங்கை அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான முதல் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.